வெளியீடு எண். 692.

உ

குருபாதம்

இருபா இருபஃது


(விளக்கவுரை - ஆங்கில மொழிபெயர்ப்புக்களுடன்)

தருமையாதீனம்

1977

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

இ[illegible]ாவது குருமகாசந்நிதானம்,



ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

குருமூர்த்த ஆலயம்

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

இரண்டாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

குருபூஜை விழா மலர்

8—1—1977

(நள – மார்கழி 24 ஆம் நாள்)

அன்பளிப்பு :
தஞ்சாவூர்
நடராஜ பிள்ளை உலகநாதன் M.A.B.T

வெளியீடு எண் 692

சிவமயம்

குருபாதம்

இருபா இருபஃது

(விளக்கவுரை - ஆங்கில மொழிபெயர்ப்புக்களுடன்)

இந்நூல்,

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவுளப்பாங்கின்வண்ணம்

"ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்"

வெளியிடப்பெற்றது.

அன்பளிப்பு:

தஞ்சாவூர்

நடராஜபிள்ளை உலகநாதன் M.A B T

தருமையாதீனம்

8—1—1977

விளக்க உரை ஆசிரியர் :

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,
சித்தாந்தப் புலவர்மணி,

திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L., அவர்கள்

ஆசிரியர், 'திருக்கோயில்' சென்னை,

ஆங்கில மொழிபெயர்ப்பு :

ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை B. A., B. L.,

பதிப்பகம் :

ஞானசம்பந்தம் அச்சகம்,

தருமபுரம்.

உ
சிவமயம்

அணிந்துரை

திரு. எம். கே. பாலசுப்பிரமணியம் I. A. S.
ஆணையர், அறநிலையத்துறை. சென்னை – 34.

திருமடங்கள் :

தமிழ்நாட்டின் சமய வாழ்வில், திருமடங்கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்து விளங்குகின்றன. திருமடங்களால் தமிழ்நாட்டிற்கு விளைந்துள்ள நன்மைகளுக்கு அளவே யில்லை. திருநாவுக்கரசர் 1300 ஆண்டுகளுக்கு முன்னரே, திருப்பூந்துருத்தியில் ‘ திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் ஆங்கொன்று செய்து ’ திருத்தொண்டு புரிந்தார்.

திருப்புகலூரில் முருக நாயனார் திருமடம் ஒன்று அமைத்திருந்தார். அதன்கண் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சிறுத்தொண்டர், திருநீலநக்கர் முதலிய பலரும் சென்று தங்கியிருந்தனர். அதனால், ‘ பாங்கில்வரும் சீர் அடியார் பலரும் உடன் பயில்கேண்மை நீங்கரிய திருத்தொண்டின் நிலையுணர்ந்து ’ நெறி நின்றனர்.

திருவீழிமிழலையில் இருந்த திருமடத்தில் தங்கித்தான், திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும், பஞ்சத்தால் வாடி வருந்திய மக்களுக்கெல்லாம் இருபொழுதும் சோறு அளித்துத் துயர் போக்கினர்.

திருநாவுக்கரசர் பெயரால் அப்பூதியடிகள், 'படிநிகழ் மடங்கள், தண்ணீர்ப்பந்தல்கள் முதலாயுள்ள முடிவிலா அறங்கள் செய்து' முறைமையால் வாழ்ந்துவந்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவதிகை சென்றபொழுது திருநாவுக்கரசர், தொண்டு செய்த சிறப்புடைய தலம் என்று நினைத்து, அத்தலத்தை மிதித்தற்கஞ்சி, அதன் புறத்தே இருந்த சித்தவடமடம் என்னும் 'வரிவளர் பூஞ் சோலை சூழ்' மடத்தின்கண் சென்று தங்கினார்.

இத்தகைய பலப்பல செய்திகளால் மிகப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே, தமிழகத்தில் எண்ணற்ற பல திருமடங்கள் அமைந்திருந்தன என்பதும், அவைகள் மக்களுக்கு அளவற்ற பல தொண்டுகள் புரிந்து நலம் விளைத்துவந்தன என்பதும் புலனாகின்றன. சிறப்பாக, திருமடங்கள் பலவும் கல்வியைப் பரப்பி, அறியாமைப் பிணியினைப் போக்கிவந்தன. திருமடங்களில் ஞானாசிரியர்கள் இருந்துகொண்டு தம்மைச் சூழ்ந்த சீடகோடிகளுக்குச் சமய சாத்திர தத்துவஞான உபதேசங்களை வழங்கிக் கொண்டிருந்த தன்மை, சந்திரனை மையமாகக்கொண்டு எண்ணற்ற விண்மீன்கள் ஆகிய தாரகைகள் சூழ்ந்து விளங்குதலைப் போன்றது. இவ்வுண்மையினை,

"ஓது புடைசூழ் சிறுவர்களும்
உதவும் பெருமை ஆசானும்,
போதின் விளங்கு தாரகையும்
மதியும் போலப் புணர்மடங்கள்"

எனச் சேக்கிழார் சுவாமிகள் திருமடங்களைப் புகழ்ந்து குறிப்பிட்டிருத்தல், அவைகள் தொன்றுதொட்டுச் செய்து வரும் கல்வி அறிவுத் தொண்டின் சிறப்பை, நன்கினிது விளக்குவதாகும்.

தருமபுர ஆதீனம் :

இத்தகைய திருமடங்கள் பலவற்றுள் "தென்னிந்தியத் தமிழ் மக்களின் பேரறிவின் சிறந்த பெருவிளைவு, ("The choicest product of the Tamilian" intellect) எனப் போற்றப்பெறும் சைவசித்தாந்தத் தத்துவச் செந்நெறியைச் சார்ந்த, பழமையும் பெருமையும் வாய்ந்த சைவத் திருமடங்கள் (சைவ ஆதீனங்கள்), பதினெட்டு என்பர். அவைகளுள் திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமபுர ஆதீனமும் ஒன்று ஆகும்.

சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னர், குருஞானசம்பந்தர் என்னும் சைவப் பெருஞ்சான்றோரால், தருமபுர ஆதீனம் நிறுவப்பெற்றுப் பலப்பல சிறந்த பணிகளை ஆற்றி வருகின்றது. இவ்வாதீனத்தின் அருளாட்சியில், சீகாழி, திருக்கடவூர், திருவையாறு; புள்ளிருக்குவேளூர் முதலிய 27 கோயில்கள், மிகவும் நல்லமுறையில் சிறப்புற நிர்வகிக்கப் பெற்று வருகின்றன. குமரகுருபர சுவாமிகள், வெள்ளியம்பல வாணத் தம்பிரான், படிக்காசுத் தம்பிரான், கந்தபுராணச் சுருக்கம் பாடிய சம்பந்த சரணலயர் போன்ற பலப்பல சைவப் பெருஞ் சான்றோர்கள், இவ்வாதீனத்தின் சீடர்களாகவும் தம்பிரான்களாகவும் விளங்கியிருந்தனர் என்பதொன்றே, இவ்வாதீனத்தின் அருமை பெருமைகளை இனிது விளக்கும்,

ஆதீனம் ஆற்றும் அரும் பணிகள் :

தருமையாதீனம் வேத ஆகமபாடசாலை, தேவார பாடசாலை, குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, பல்கலைப் புலவர்கல்லூரி, சென்னையில் சமயப்பிரசார நிலையம், மற்றும் மருத்துவ விடுதி, அநாதை இல்லம்

முதலிய பல நிறுவனங்களை அமைத்து, சிறந்த பல தொண்டுகளை ஆற்றிவருகின்றது. 'ஞானசம்பந்தம்' என்னும் திங்கள் இதழ் ஒன்றைப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்தி வருவதுடன், சைவத்திருமுறைகள் சைவசித்தாந்த சாத்திரங்கள், தல புராணங்கள் தமிழ் இலக்கண - இலக்கியங்கள் மற்றும் பயனுள்ள பல்வேறு பொதுவகை நூல்கள் ஆகியவற்றையும், வெளியிட்டு நலம்பலபுரிந்து வருகின்றது.

ஆனந்தபரவசர் குருபூசை :

அம்முறையில் அண்மையில் 8—1—77 அன்று நிகழவிருக்கும் ஆனந்தபரவசர் (ஆதீனத்தின் இரண்டாவது குருமகாசந்நிதானம்) குருபூசைவிழாவில், 'இருபா இருபஃது' என்னும் சைவசித்தாந்த சாத்திர நூல் வெளிவருவதற்குத் தருமையாதீனத்தின் 26-வது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், திருவருள் பாலித்திருக்கின்றார்கள்.

இருபா இருபஃது :

'சநாதனமதம்' எனப் போற்றப்பெற்றுவரும் புராதனமான நமது இந்துமதத்தைச் சார்ந்த தத்துவக்கொள்கை வகைகளுள் சங்கரரின் அத்துவைதம், இராமாநுஜரின் விசிஷ்டாத்துவைதம், மத்துவரின் துவைதம் என்றும் மூவகைப் புகழ்மிக்க தத்துவக் கொள்கைகளைப் போல மெய்கண்டார் (கி. பி. 1232) என்னும் தமிழ்ச் சைவச் சான்றோர் விளக்கி யருளிய 'சுத்தாத்துவைதம்' என்னும் சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கைக்குரிய பிரமாண நூல்கள் 14 ஆகும். அவை யாவன :

1.	திருவுந்தியார்	8.	திருவருட்பயன்
2.	திருக்களிற்றுப்படியார்	9.	வினாவெண்பா
3.	சிவஞானபோதம்	10.	கொடிக்கவி
4.	சிவஞானசித்தியார்	11.	போற்றிப் பஃறொடை
5.	இருபா இருபஃது	12.	நெஞ்சுவிடுதூது
6.	உண்மை விளக்கம்	13.	உண்மைநெறிவிளக்கம்
7.	சிவப்பிரகாசம்	14.	சங்கற்ப நிராகரணம்

இவற்றுள், சிவஞானசித்தியார் என்னும்சிறந்த ஞானப் பெருநூலை இயற்றிய அருள்நந்திசிவாசாரியார் அவர்களால் இயற்றப்பெற்ற மற்றொரு நூலே "இருபா இருபஃது" என்பதாகும். வெண்பா அகவற்பா என்னும் இருவகை யாப்புகளில், இருபது செய்யுட்களில் அமைந்தமையின், இந்நூலுக்கு "இருபா இருபஃது" என்னும் பெயர் வழங்குவதாயிற்று. இதன்கண் அருள்நந்திசிவாசாரியார், தமக்குற்ற ஐயப்பாடுகளைத் தமது ஞானாசிரியராகிய மெய்கண்டதேவர்பால் விண்ணப்பித்துக்கொண்டு, அவற்றிற்கு அவர் அளித்த விடைகளையும் விளக்கங்களையும் தொகுத்து, இதனை நல்லதொரு தத்துவ ஞானத் தொகுப்பு நூலாகவும் துதி நூலாகவும் இயற்றியுள்ளார். அது பற்றியே, இந்நூலை ஆனந்தபரவசர் குருபூசை விழாவில் வெளியிடுவதற்கு, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளம் கொண்டருளினார்கள்.

தமிழ் உரை விளக்கமும், ஆங்கில மொழி பெயர்ப்பும் :

இங்ஙனம் ஆனந்தபரவசர் குருபூசை விழா மலராக வெளிவரும் "இருபா இருபஃது" நூலுக்கு, எளிய இனிய நடையில், தெளிவானமுறையில், அமைந்துள்ள

இவ்வுரை விளக்கம், "திருக்கோயில்" ஆசிரியர், திரு. ந, ரா. முருகவேள் M A., M. O. L.. அவர்களால், "திருக்கோயில்" இதழில் முன்னரே (1970) எழுதி வெளியிடப் பெற்று, அதன் மறுபதிப்பாக வெளிவருகின்றது என்பது அறிந்து, யான் மிகவும் மகிழ்கின்றேன்.

எளிய இனிய நல்ல இந்தத் தமிழ் உரை விளக்கத்துடன், பேரறிஞராகத் தலைசிறந்து திகழ்கின்ற திரு. ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை B. A., B. L.. அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பும், ஆங்கில உரைக் குறிப்பும் இணைக்கப் பெற்றிருப்பது, பொன்மலர் நன்மணம் பெற்றாற்போல, மிக்க சிறப்பும் பயனும் உடையதாக விளங்குகின்றது.

வணக்கமும் வாழ்த்தும் :

இந்த நல்ல பயன்மிக்க சாத்திர நூலை வெளியிட்டு வழங்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்குச் சமய உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. அவர்களுக்கு என் பணிவார்ந்த அன்பையும் வணக்கங்களையும் சமர்ப்பித்துக் கொள்ளுவதுடன், திரு. ந. ரா. முருகவேள் அவர்களுக்கு என் பாராட்டுதல்களையும் வாழ்த்துதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்க தருமையாதீனம்!

வளர்க அதன் பலவகைப் பொதுநலப் பணிகள்!

உ

சிவமயம்

முன்னுரை

எல்லாம் வல்ல இறைவன் உயிர்கள் தம்மை உணர்ந்து உய்தி பெறுதற்பொருட்டு அருளிச்செய்யப்பெற்ற நூல்கள் வேத சிவாகமங்களும் அவற்றின் வழித்தோன்றிய தோத்திர சாத்திரங்களுமாகும். அவற்றுள், இறைவனை அன்புநெறியினால் அடைதற்குப் பயன்படுவன தோத்திரங்கள். அறிவு நெறியினால் அடைதற்குப் பயன்படுவன சாத்திரங்கள். இலக்கியம் தோத்திரம். இலக்கணம் சாத்திரம். தோத்திரங்கள் பன்னிருதிருமுறைகளாகும்; சாத்திரங்கள் மெய்கண்ட சாத்திரம் என வழங்கப்படும் பதினான்கு நூல்களாகும்.

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஐந்தாவதாகத் திகழ்வது இருபா இருபஃது எனப்பெறும். வெண்பா அகவற்பா என்னும் இருவகைப் பாக்களினால் இயன்ற இருபது செய்யுட்களைக் கொண்டதாதலின் இந்நூற்கு இருபா இருபஃது எனப்பெயர் அமைந்தது. இந்நூற் பாடல்கள் அந்தாதித் தொடைபடத் தொடர்ந்து மண்டலித்து நிறைவுறுகிறது. இதன் ஆசிரியர் திருத்துறையூர் அருள் நந்தி சிவாசாரிய சுவாமிகள் ஆவார். இவர் தமது ஞானசாரியர் ஆகிய மெய்கண்ட தேவ நாயனாரைத் தொழுது துதித்து அவர்பால் தமக்குற்ற பல ஐயங்களைத் தெரிவித்துக்கொண்டு தெளிவுபெறும்வகையில்சிந்தித்துத் தெளிந்து உணர்தற்குரிய இந்நூலை இயற்றியுள்ளார்.

"ஐயங்கள் தோன்றுதலே ஆன்மீக வளர்ச்சியின் அறிகுறி" (The deepening of the doubt is the sign of Spiritual growth) என்பர் அறிஞர். அம்முறையில் இங்கு நிகழப் பெறும் ஐய வினாக்களும் உரைகளும் தருக்க நெறி முறைக்கும் பகுத்தறிவியல்பிற்கும் அறிவாராய்ச்சித் திறனுக்கும் (Logical, rational and original) தத்துவச் சிந்தனையாளர்களால் பொன்னினும் மணியினும் போற்றத்தக்கனவாகப் பொலிகின்றன.

அருணந்தி சிவாசாரியார் தம்மை ஆட்கொண்டருளிய குருநாதராகிய மெய்கண்டதேவ நாயனார் பால் தமக்குத் தோன்றிய ஐயங்களை விண்ணப்பிப்பது போல பல்வகை வினாக்களையும் எழுப்பிக் குறிப்பால் அவற்றிற்குரிய விடைகளையும் தெரிவித்தருளுதல் இந்நூலின் சிறப்பாகும்.

(1) இறைவன் உயிரின் உணர்வோடு எக்காலத்தும் கலந்திருந்தும் உயிருக்கு அறியாமை வருதற்குக் காரணம் யாது?

(2) உயிர் விழிப்பு நிலையில் அறிவுடையது. உறக்க நிலையில் அறியாமை உடையது. ஆதலின் அதனை அறிவுப் பொருள் என்று கொள்வதா? அறியாமைப் பொருள் என்று கொள்வதா?

(3) ஆணவம், கன்மம், மாயைஎன்னும் மும்மலங்களும் ஜடமாயின் அறிவில்லாத அம்மலங்கள் உயிரைத் தொழிற்படுத்துவது எப்படி?

(4) இருளாகிய மலம் அருளாகிய ஒளியின் முன்னர் நில்லாது. உயிருக்குத்தானே அறியும் அறிவில்லை. ஆதலின் உயிரும் இருளும் ஒன்றியது எப்படி?

(5) உயிர்கள் எங்கும் விரவிக் கலந்து நிற்றல், ஐந்தவத்தைப் படுதல், சுவர்க்க நரகங்களிற் போக்கு வரவு புரிதல் ஆகிய மூன்றையும் உடையன. இம்மூன்றனுள் ஆன்மாவின் இயல்பான தன்மை எது?

(6) உயிர் நனவையன்றிக் கனவு முதலிய நான்கு அவத்தைகளையும் அறியுமாறில்லை; ஏன்எனில் அவற்றில் இறங்கிப் பின் மீளாமையின். அங்ஙனமாகவும் எவ்வள வையைக்கொண்டு ஏனைய நான்கு அவத்தைகளின் இயல்பு களை வேறுபடுத்தி உணர்வது?

(7) ஆன்மா என்றொரு பொருள் உண்டு என்பதை அறியும் வகை யாது?

(8) ஆன்மா மூலாதாரத்தில், துரியாதீதத்தில் ஒடுங்கி நிற்குங்கால் அது தன்னை உணரும் முறை எவ்வாறு?

(9) இருவினை ஒப்பிற்குப் பின்னரும் உயிருக்கு உலகப் பற்று ஏற்படக் காரணம் யாது?

(10) இறைவனை அடையும்போது உயிருக்கு மலம் இல்லை. மலத்திலே கட்டுப்பட்டால் மலத்தையும் இறை வனையும் ஒரே காலத்தில் உயிர் பற்றுது. ஆதலின் உயிர் பாசத்தையும் பதியையும் அறிதல் எங்ஙனம்?

(11) இறைவன் ஒருகால் உயிரொடு கூடியும் ஒருகால் கூடாமலும் இருத்தல் எவ்வாறு?

(12) மனம் வாக்கு காயம் ஆகியவற்றின் செயற் காரணமும் அவற்றின் காரியமாகிய இருவினைகளும் சடமே யாகும். அவை உயிர்கள் எடுக்கும் பிறவிகள்தோறும் அவற் ருேடு வந்து பொருந்துதலும் யாங்ஙனம்?

(13) முன்செய்தொழிந்த வினைகள் தாமே வந்து உயிர்களைச் சாருமா? அல்லது உயிர் அவைகளைச் சாருமா? இறைவன் அமலனுதலின் அவன் அவற்றை உயிர்களொடு

கூட்டுவிக்கமாட்டான். அவ்வாறு அவன் கூட்டுவிப்பானு யின் இறைவனருள் உயிர்கட்குத் துணையாகாதொழியுமே. பின் அவன் அருள் எதற்கு ?

(14) இருவினையொப்பு நிலையில் உயிர்களிடமிருந்து அகன்ற வினைகள் யாவை ? அகன்றனவாயின் அவை தமது பயனை யாருக்கு நுகர்விக்கும் ?

(15) எல்லா உயிர்களும் இறைவனின் அடிமை. பெத்தம் முத்தி இருவகை நிலைகளிலுள்ள உயிர்களும் இறைவனால் செயற்படுகின்றன. ஆனால் இறைவன் சிலருக்கு வெளிப்பட்டும் சிலர்பால் மறைந்து நின்றும் அருள்செய் தற்குக் காரணம் யாது ?

இன்னோரன்ன வினாக்களையும் துணை வினாக்களையும் எழுப்பி அவற்றிற்குரிய விடைகளைக் குறிப்பால் புலப்படு மாறு செய்தருளுகின்றார் அருணந்திசிவம்.

வினா விடைகளில் தேவாரப் பாடல்கள் கருத்து விளக்க மேற்கோள்களாகக் காட்டப்பெறுகின்றன.

முதலில் எழுப்பப்படும் வினாக்களுக்குச் சங்கிலித் தொடர்போல் வரும் துணை வினாக்கள் ஓரளவு விடையாய் அமையுமாறு செய்து முடிவில் ஆசாரியர் விடை கூறி முடிவு அருளும் நிலையில் நூலை அருளிச்செய்கின்றார். இத் தகைய அருள் நூலாகிய இருபா இருபஃது என்னும் இந்நூல், உரை விளக்கத்துடனும் ஆங்கில மொழிப் பெயர்ப்புடனும் செந்தமிழ் மொழியும் சித்தாந்தச் சைவ மெய்ந்நெறியும் தழைத்தினிதோங்குமாறு அருள் ஞானச் செங்கோல் ஓச்சிவரும் தருமையாதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாணைப்படி, நள ஆண்டு மார்கழித்திங்கள் 24 ஆம் நாள் (8—1—1977)

சனிக்கிழமை அன்று நடைபெறும் இவ்வாதீன இரண்டாவது குருமூர்த்திகளாய் இலங்கி அதிதீவிர பக்குவத்தால் சிவனடி கூடிய ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் குருபூசை விழா மலராக வெளிவருகின்றது;

இந்நூலின் உண்மைப் பொருளை உள்ளவாறு உணரும் வகையில் சிறந்த முறையில் உரை விளக்கம் செய்துள்ளவர் நமது தருமையாதீனத் தமிழ்ப்புலவரும், சென்னை 'திருக்கோயில்' ஆசிரியருமாகிய சித்தாந்தப் புலவர்மணி, புலவர் திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L., ஆவார்கள். அவர்களால் எழுதப்பெற்று தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் வெளியிடப்பெறும் திருக்கோயில் இதழில் வெளிவந்தது இவ்வுரை விளக்கம். இதனைத் திருக்கண்நோக்கம் செய்தருளிய ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் சைவ நல்லுலகிற்கு நிலையாகப் பயன்படுமாறு இதனை நூல் வடிவாக மூலபாடங்களுடன் வெளியிடத் திருவுளம் பற்றியருளினார்கள்.

ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை B. A. B. L., இந்நூலை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்து உரைக்குறிப்பும் எழுதி வெளியிட்டிருந்தார்கள். இம்மொழிபெயர்ப்பு நூல்பதிப்பீடும் உரிமை தருமை ஆதீனத்தில் பெறப்பட்டிருக்கிறது. அது தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரி முன்னாள் பேராசிரியர் பு. சி. புன்னைவனநாத முதலியார் முன்னுரையுடன் 25 வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளாணையின் வண்ணம் 24 வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழாமலராக 28-5-47 இல் வெளியிடப்பெற்றது. அவ் ஆங்கில மொழிபெயர்ப்பையும் இந்நூலோடு இணைத்து வெளியிடுமாறு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

பணித்தருளிய வண்ணம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா மலராக இந்நூல் 8—1—77 இல் வெளியிடப் பெற்றது. தமிழும் ஆங்கிலமும் கற்றவர்கள் இந்நூற் பொருளை விளக்கமாகஅறிய இந்நூல் பெரிதும் உதவியாக இருக்கும்.

திருக்கோயில்களும் திருமடங்களும் அவ்வவற்றிற்குரிய பணிகளைச் செம்மையாகப் புரிந்து சிறக்கவேண்டும் என்பதில் ஆர்வமும் செயல் திறமும் உடைய தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம் I, A. S. அவர்கள் இந்நூலின் சிறப்பையும் தருமை ஆதீனத்தின் பெருமையையும் உரை மாட்சியையும் தருமைக் குருமணி அவர்கள் அருள் நலத்தையும் போற்றி அணிந்துரை வழங்கியுள்ளார்கள். அணிந்துரை வழங்கிய அறநிலையத்துறை ஆணையர் அவர்களுக்கும் விளக்கவுரை எழுதிய திரு. ந. ரா. முருகவேள் அவர்களுக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசி என்றும் உரியது.

அன்பர்கள் குருவருளுக்கு நன்றி செலுத்தி இந்நூலை ஓதி உணர்ந்து இம்மை மறுமைப் பயன்கள் பலவற்றையும் பெற்று இன்புறுவார்களாக.

இன்னணம்,

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

அருளாணையின்வண்ணம்,

தருமபுரம்,
8—1—1977.

வி. சா. குருசாமி,

முதல்வர் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி.

Printed in First Edition

PREFACE

"The Saiva Siddhanta is the most elaborate, influential and undoubtedly the most intrinsically valuable of all the religions of India".

Dr. G. U. Pope.

Saiva Siddhanta denotes a complete system of philosophical thought concerning the nature and relationship of God, Souls, and the Universe and of the religious practice, whereby souls attain salvation. Saivam is derived from Sivam (the blissful Lord) and Siddhanta means the conclusion of conclusions. The Saiva Siddhanta is often simply referred to as Siddhantam. It is both a philosophy and a religion. Its claims to truth are based not only on the revealed nature of its scriptures but also on reason and the personal realization of a long line of Saiva Seers. Saiva religion is universal and treats both of Parapaksham and Supaksham. The worship of Siva is from time immemorial and is beyond our research.

Saiva Siddhanta is a revealed religion. From the orthodox saiva point of view, its scriptures are the Vedas and the twenty eight Sivagamas. Thevaram, Thiruvachakam etc., of Panniru Thirumurai are sacred scriptures in Tamil.

The authoritative books in Tamil on the philosophy of Saiva Siddhanta are the Fourteen Sastras. This publication "Irupa Irupahtu" is one of the fourteen sastras mentioned above. The author is St. Arulnandi Sivachariar of Tiruthuraiyur,

He is the second in the Holy line of Pura-santhana-charyas.

"Irupa Irupahtu" contains twenty stanzas, ten in Venba Metre and ten in Agaval Metre. The significance of a Guru and the different ways of grace he bestows are well impressed upon in the invocation stanza itself. The knowledge of God can only be secured by the grace of the Guru and not by any other means. If one does worship his gracious Guru, as the Para-Brahmam, as Para-Sivam and Para-gnana, and as all the manifestations of Hara, then Guru becoming God Himself will convert the desciple into His Form by means of touch, thought, and sight.* God appears in the form of man-Guru-to redeem the befitting souls. The author identifies his Guru Meikanta with God and as such to see him is to see God and become one with Him.

To help the readers to comprehend the high lights of the work, I shall touch upon the following points:—

God is immanent in all nature and in man and yet it untainted and transcendent and without Whose will and power neither evolution nor salvation is possible. God's touch is necessary to finally emancipate the soul. He is ever present in the soul, as ghee in milk. After the Guru's touch,

---

* Modes of initiation.

Akamya will not rise and the body will perish as darkness before light. The affnity of matter and Anavamala etc., with souls is eternal like the verdigris in copper and husk and bran etc., in rice and can be removed. It is Achit, Jatam or not inteligent like the soul and the souls's inteligence is of a different plane from that of God. Being pure chit. God knows no limitation, and obstruction, and his full and undivided presence is felt in the least of the least and the great of the great. As St Meikanta points out, man and his Karma act and react, attracted to each other, as a piece of iron is by a magnet. But both would be lifeless but for the Supreme power of god acting on them both. It is only when we renounce all, famıly, wife, friends and glittering things of this vain world, which are, as it it were delusion so transitory and so elusive, that God gives Himself wholly to us and St. Manickavachaka asks who is the better in the bargain. "Thou gavest Thyself to me and took me unto Thyself, Oh Sankara, who is the cleverer of the two?" The released soul alone is entitled to eternal Bliss.

Mention may be made that copy-right of all the works by my esteemed friend late Mr. J. M. Nallaswami Pillai B. A., B. L., and some works of Sri Iswaramurthi Pillai, son of my old friend and scholar Sri Arumukam Pillai of Pettai, has been obtained by His Holiness late Sri-la-Sri Shanmuka Desika Gnana Sambanda Paramacharya Swamigal,

24-th in descent of the Dharmapuram Adhinam. It is pleasing to note that in this edition the Tamil portion is from Sri Iswaramurthi Pillai's work and the English portion is the translation of Late Mr. Nallaswamy Pillai.


The present Head of the illustrious Mutt of Dharmapuram and his immediate predecessor have sensed for the publication of numerous works in Tamil. His Holiness Sri-la-Sri Subramanya Desika Gnana Sambanda Paramacharya Swamigal the cultivator and promoter of classical, religious, and secular education has begun the publication of English translations of rare works in Saiva Siddhanta also.

This publication is made on the occasion of the Second Anniversary of his Holiness Sri-la-Sri Shanmuka Desika Gnana Sambanda Paramacharya Swamigal on Wednesday the 28th May, 1947 (சர்வசித்து ஆண்டு வைகாசித் திங்கள் கச-ம் நாள்).

On behalf of the Public and on my own behalf, I express my deep debt of gratitude to the Present Maha Sannidhanam for graciously allowing me to contribute my mite in writing this preface.

"Pulavaraham'
Mayavaram'
25—5—1947.

P. C. Punnaivananatha Mudaliar,
Senior Professor in Tamil
& Vice Principal "Oriental College"
Dharmapuram Adhinam.



திருத்துறையூர்
ஸ்ரீ அருணந்தி தேவர்

உ

சிவமயம்

ஸ்ரீ அருணந்திதேவர் அருள் வரலாறு

ஈராண்டிற் சிவஞானம் பெற்றுயர்ந்த
மெய்கண்டார் இணைத்தாள் போற்றி
நாராண்ட பல்லடியார்க் கருள்புரிந்த
அருணந்தி நற்றாள் போற்றி
நீராண்ட கடந்தைநகர் மறைஞான
சம்பந்தர் நிழற்றாள் போற்றி
சீராண்ட தில்லைநகர் உமாபதியார்
செம்பதுமத் திருத்தாள்போற்றி.

—சந்தானாசாரியர் புராண சங்கிரகம்.

திருவவதாரம் :

மெய்கண்ட தேவர் அவதரித்த நடுநாட்டில் சுந்தரர் தவநெறி வேண்டிப் பெற்ற தலமாகிய திருத்துறையூரில் ஆதி சைவ மரபில் அருணந்திசிவனார் அவதாரம் செய்து சந்தான பரம்பரை முதற் குரவரான மெய்கண்ட தேவ நாயனாரின் சீடரானார். அவ்வாறு ஆவதற்குமுன் இவர் சகல ஆகமங்களிலும் வல்லவராய் இருந்தமையால், 'சகலாகம பண்டிதர்' என்னும் சிறப்புப் பெயர் பெற்று விளங்கித் தமது குருவழி முறைப்படி, வேளாளர்மரபினர்க்குக் குலகுருவாய் விளங்கியிருந்தார். மெய்கண்டதேவர் அவதாரத்திற்கே காரணமாய், அவர்தம் தந்தையார் திருப்பெண்ணாகடம் அச்சுதகளப்பாளர்என்பவருக்குத்தேவாரத்

திருமுறையில் கயிறு சாத்திப்பார்த்துப் " பேயடையா பிரிவெய்தும் " என்னும் திருப்பாடல் உதயமாகக்கண்டு திருவெண்காட்டிறைவரை வழிபடும்படி கட்டளையிட்டவர் இவர். அதன்படி ஒழுகிய அச்சுதகளப்பாளருக்கு மெய்கண்டார் மகவாக அவதரித்து ஆசாரியத்தன்மை பெற்று விளங்கினர்.

திருவெண்ணெய்நல்லூருக்கு எழுந்தருளுதல்.

மெய்கண்டார் ஆசாரியத்தன்மை பெற்று விளங்கி யிருந்த நிலையில் அவர் தம்மை வந்து காணவில்லையே என்ற எண்ணத்துடனும், இரண்டு வயது நிரம்பிய குழந்தை சைவ சித்தாந்த பாடம் எப்படிச் சொல்கிறது என்பதைக் காணவேண்டுமென்னும் நோக்கத்துடனும் சகலாகம பண்டிதர் திருவெண்ணெய்நல்லூருக்குத் தமது விருதுகளுடன் எழுந்தருளினர். அவ்வூர் மக்களனைவரும் வீடுகள் தோறும் பூரண கும்பமெடுத்து மங்களவாத்தியங் களோடு தங்கள் குருவாகிய சிவாசாரியரை எதிர்கொண்டு வரவேற்றனர். மெய்கண்டார் மாத்திரம் தமது இருக்கை யிலேயே வீற்றிருந்து சித்தாந்தஞானத்தை உபதேசித்துக் கொண்டிருந்தார். அதுகண்ட அருணந்தி சிவனர் தாம் ஓரிடத்தில் தங்கி இருந்துகொண்டு மெயகண்டாரைப் பற்றி வினவினர்; அவரை அழைத்துவருமாறு தமது சீடர்களை அனுப்ப அவர்கள் சென்று மெய்கண்டாரது சாத்திர உபதேசத்தில் ஈடுபட்டு அவரடிக்கு ஆளாகி விட்டனர். இதையறிந்த சகலாகமபண்டிதர் தாமே மெய்கண்டார், சாத்திரஉபதேசம்செய்யும் திருமாளிகைக்கு எழுந்தருளினர். அப்பொழுதும் உபதேசத்தில் ஈடுபட் டிருந்தமெய்கண்டார் இவரைவரவேற்கவில்லை. அவ்வமயம் மெய்கண்டார் ஆணவ மலத்தின் தன்மையைப் பற்றி விளக்கம் தந்துகொண்டிருந்தார்.

சிவஞானோபதேசம் :

உடனே தம்மைப் பொருட்படுத்தவில்லையே என்று எண்ணிய சகலாகம பண்டிதர், தன்முனைப்போடு " ஆணவத்தின் சொரூபம் யாது? " என்று மெய்கண்ட தேவரைக் கேட்டார். சிவஞானமே உருவாய்த் திகழ்ந்த மெய்கண்டார் இன்முகத்தோடு அவரைத் திருவருள் நோக்கம் செய்து தமது திருவிரலால் அவரையே சுட்டிக் காட்டி, ஆணவசொரூபத்தைஉணரச்செய்தார். அக்கணமே அச்சிவஞானக் கதிரவனது அருளொளி நோக்கால் மலவிருள் அகலப்பெற்ற சகலாகமபண்டிதர் உண்மை உணர்ந்து, மெய்கண்டதேவரது திருவடியில் வீழ்ந்திறைஞ்சித் தமக்குச் சிவஞானத்தைத் தந்தருள வேண்டுமென்று குறையிரந்தார், அவருக்கு உடனே திருவடி தீட்சை செய்து, மெய்யுணர்வு அருளி ' அருணந்தி ' எனத் தீட்சா நாமம் செய்து, சிவஞானபோதச் செம்பொருள் தெரித்துத் தமது நாற்பத்தொன்பது மாணவர்களுள் முதன் மாணவராகும் பேற்றை நல்கினார். தமக்குச்செய்த இப்பெரு நன்மையை அருணந்திசிவம், தாம் இயற்றிய " சிவஞானசித்தியார் பாயிரத்துள்ளும் "இருபா இருபஃது என்ற சித்தாந்த நூலினுள்ளும் அழகு பெற வியந்து துதித்துள்ளார்.

இரண்டு சாத்திரங்கள் :

இவர் இயற்றிய நூல்கள் இரண்டு. ஒன்று சிவஞான சித்தியார்; இந்நூல் மெய்கண்டசாத்திரம் பதினான்கனுள்ளும் விரிந்தநூலாய், புறச்சமயம் மறுக்கும் பரபக்கமும் அகச்சமயம் விளக்கும் சுபக்கமுமுடையதாய்த் தாயுமானார் முதலியோரால் பெரிதும் போற்றப் பெற்றதாய், சிவஞான போதத்திற்குச் செய்யுள் வடிவில் அமைந்த பாஷ்யமாய் உள்ள சிவஞானக் களஞ்சியமாகும். மற்றொன்று இருபா இருபஃது என்பதாகும். இதுவும் அப்பதினான்கனுள்

ஒன்று. இதில் இவர் தமது குருநாதரை வினவு முகத்தால் சித்தாந்த உண்மையைத் தெளிவுற விளக்கியுள்ளார்.

திருவடிப்பேறு :

சில காலங்கழித்து அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் தமது மாணவர்களுள் சிறந்தவரான மறைஞான சம்பந்தருக்கு ஞானோபதேசம் செய்தருளி ஓர் புரட்டாசிப் பூர நாளில் அகண்டபரிபூரண சச்சிதானந்த நிலையை எய்தினர். இவரது சமாதித் திருக்கோயில் திருத்துறையூரில் அமைந்துள்ளது. இவர் கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவரது சிவஞானசித்தி நெறியினை வழிவழியாகப் போற்றி வளர்த்துவருவது தருமபுர ஆதீனமாகும்.

நூற்பெருமை :

இவர் இயற்றிய சிவஞான சித்தியாரின் பெருமையைக் கீழ்வரும் பாடல்களால் தெளியலாம்.


"வள்ளுவர் நூல் அன்பர்திரு வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி யோராறும்
தண்டமிழின் மேலாந் தரம்." —தனிப்பாடல்.

"பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியிற் சித்தியிலே
ஓர்விருத்தப் பாதிபோ தும்" —குருஞானசம்பந்தர்.

"பாதிவிருத் தத்தாலிப் பார்விருத்த மாகஉண்மை
சாதித்தார் பொன்னடியைச் சாருநாள் எந்நாளோ"
—தாயுமானர்.

"சிவத்திற்குமேல் தெய்வமில்லை
சித்திக்குமேல் நூல் இல்லை"

என்பது பழமொழி.



தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

தருமையாதீனத்தை நிறுவியருளிய

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாறு

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடிய பொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்கணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன் இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

— சம்பந்த சரணாலயர்.

ஸ்ரீ வில்லிபுத்தூரில் கார்காத்த வேளாளர் குலத்தில் சுப்பிரமணிய பிள்ளைக்கும் மீனாட்சியம்மைக்கும் அருந்தவ மகவாக அவதரித்தார் ஸ்ரீகுருஞானசம்பந்தர். மதுரையம் பதிக்குத் தம் பெற்றோருடன் சென்று குல தெய்வமாகிய ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டார். திருவருளால், பொற்றாமரைக்குளத்தில் ஈசானமூலையில் பெட்டகக் கோயிலுடன் சொக்கநாதர் கண்ணுக்கினிய பொருளாகக் கைவரப் பெற்றார். சொக்கேசன் அருளால் திருவாரூர் சென்று ஞானப்பிரகாச தேசிகரை வணங்கிச் சிவஞானோபதேசம் பெற்றார். சொக்கநாதர் பூஜையும், எழுந்தருளச்செய்து.

கொடுக்கப்பெற்றார். குருவாணைப்படித் தருமபுரத்தில் அமர்ந்து பக்குவான்மாக்களுக்கு ஞானோபதேசம் செய்து சைவசித்தாந்தத்தைப் பரவச்செய்தார். தமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீசொக்கநாதர்மீது சொக்கநாதவெண்பாப் பாடித் துதித்தார். சிவபோகசாரம், முத்தி நிச்சயம், சொக்க நாதக் கலித்துறை, ஞானப்பிரகாசமாலை, சோடசகலாப் பிராசாதசட்கம், திரிபதார்த்தரூபாதி தசகாரிய அகவல், நவரத்தினமாலை ஆகிய நூல்களையும்அருளி, சைவசித்தாந் தத்தைப் பரவச்செய்தார்.

இவ்வாறு, பல்லாண்டுக்காலம் ஞான அரசாட்சிபுரிந்து சிவலிங்கத்திருவுருவின்கீழ் ஜீவசமாதி கூடினார் ஸ்ரீ குருஞான சம்பந்தர். அவர் ஜீவசமாதி கூடிய குருமூர்த்தமே தற் பொழுது ஸ்ரீ ஞானாம்பிகை உடனுறை ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலாகவிளங்கிவருகிறது. கி.பி.16ஆம் நூற்றாண் டில் ஸ்ரீ குருஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப்பெற்ற இத் தருமையாதீனம் மொழித்தொண்டும் சமயத்தொண்டும், சமூகத்தொண்டும் ஒல்லும் வகையெல்லாம் ஆற்றி வருகின் றது. ஸ்ரீ குருஞானசம்பந்தரது பரம்பரையில்தற்பொழுது 26 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி யிருப்ப வர்கள் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள். அவர்களால் தமது ஆதி பரமா சாரிய சுவாமிகளாகிய ஸ்ரீகுருஞானசம்பந்தர்திருப்பெயரில் நிறுவப்பெற்ற 'ஞானசம்பந்தம் பதிப்பக' அறக் கட்டளை வெளியீடாக, இந்நூல் வெளியிடப்பெற்றது.



தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருணந்தி சிவாசாரியார்

அருளிச்செய்த

இருபா இருபஃது

கடவுள் வணக்கம்

கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும்—வெண்ணெய்
[நல்லூர்
மெய்கண்டான் என்றொருகால் மேவுவரால் வேறின்மை
கைகண்டார் உள்ளத்துக் கண். 1

விளக்கவுரை :- இந்நூலின் முதற் செய்யுள் கடவுள் வணக்கமாக அமைந்துள்ளது. கடவுளே குருவாக வந்து அருள்புரிதலினாலும், குரு கடவுளுக்குச் சமமானதாலும், ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரியர், தமது குருவாகிய மெய்கண்டதேவரையே கடவுளாகவைத்துப் போற்றித் துதித்துள்ளார்.

"சிவபெருமானே தன்னுடைய நெற்றிக் கண்ணையும், திருநீல கண்டத்தினையும் மறைத்து, திருவெண்ணெய் நல்லூரில் மெய்கண்டதேவர் என்னும் பெயரும் திருவுருவமும் கொண்டு எழுந்தருளிப் போந்து, உலக மக்களின்

2

பதியிலக்கணம்

கண்ணகன் ஞாலத்துக் கதிரவன் தானென
வெண்ணைத் தோன்றிய மெய்கண்ட தேவ!
காரா கிருகக் கலியாழ் வேனையின்
பேரா இன்பத் திருத்திய பெரும!
வினவ லாறு துடையேன் எனதுளம்

மலமாசுகளைப் போக்கியருள்கின்றார். அவரை ஒருமுறை சென்று பொருந்தி நினைத்துத் தொழுபவர்கள், உயிருக்குயிராக உள்ள சிவபெருமானைத் தம்முடைய உள்ளத்தின் கண் தெளிவுறக் கண்டறியும் பேறு பெற்றவர்கள் ஆவர்" என்பது இம்முதற்பாடலின் கருத்து. இதனால் சிவபெருமானே மெய்கண்ட தேவராக எழுந்தருளித் தமக்கு அருள் புரிந்தனர் என ஆசிரியர் புகழ்ந்து துதிக்கின்றார். (1)

வி—ரை :- இந்நூலின் இரண்டாவதுபாடல், ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரியர், பதியிலக்கணம் பற்றித் தமக்குத் தோன்றும் ஐயங்களைத் தமது ஆசிரியர்பால் தெரிவித்துக் கொள்ளும் முறையில், அமைந்துள்ளது.

"உலகத்துப் புற இருளைப் போக்குகின்ற சூரியனைப் போல, அறியாமையாகிய அக இருளைப் போக்கியருளுகின்ற ஞான சூரியன் எனத் திருவெண்ணெய்நல்லூரில் தோன்றியருளிய மெய்கண்ட தேவே! அறியாமையாகிய சிறையில் அடைபட்டு, உடலாகிய விலங்கு பூண்டு, துன்பப்படுகின்ற என்னை, நிலைபெற்ற பேரின்பத்தில் சேர்ந்திருக்குமாறு செய்தருளிய பெருமானே! தங்கள்பால் யான் சில ஐயங்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நீங்கா நிலைமை ஊங்கும் உனையால்
அறிவின் மைமலம் பிறிவின் மையெனின்
ஓராலினை யுணர்த்தும் விராய்நின் றனையேல்
திப்பியம் அந்தோ பொய்ப்பகை யாகாய்
சுத்தன் அமலன் சோதி நாயகன்
முத்தன் பரம்பரன் எனும்பெயர் முடியா

எளியேனுடைய உள்ளத்தைவிட்டு நீங்காமல், அறிவே உருவமாக விளங்கும் தாங்கள், எப்பொழுதும் இருந்து வருகின்றீர்கள். அங்ஙனமாகவும் அடியேனுக்கு அறியாமை வருவதற்குக் காரணம் என்ன?

நெல்லிற்கு உமியும், செம்பிற்குக் களிம்பும் போல, அநாதியே ஆணவ மலம் உன்னைப் பற்றிக்கொண்டு நிற்றலால், உனக்கு அறியாமை உண்டாயிற்று, என்று நீர் அருளிச்செய்தால்;

அது, தேவரீர் என்னை விட்டு ஒதுங்கிநின்று ஆணவ மலம் என்னைப் பற்றிக் கொள்ளுவதற்கு இடமளித்ததாக முடியும்;

'அற்றன்று; யாம் உன்னைவிட்டு நீங்கி ஒதுங்கி நிற்ப தில்லை; யாமும் உன்னோடு கூடியே நிற்கின்றோம்' என்று நீர் கூறியருளினால், அது பொருத்தமாகப் புலப்படாமல் வியத்தற்குரிய ஒன்றாக உள்ளது.

ஆணவ மலத்தைப் போலவே, நீரும் எம்மோடு கலந்து ஒன்றாக நிற்பது உண்மையாயின், வேதங்கள் நும்மை அஞ்ஞானமாகிய பொய்க்குப் பகைவன் என்று போற்றுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. தாங்கள் இயல்பாகவே தூய்மையுடையவர், மலம் இல்லாதவர்;

வேறுநின் றுணர்த்தின் வியாபக மின்ருய்ப்
பேறும் இன்ருகும் எமக்கெம் பெரும !
இருநிலந் தீநீர் இயமானன் காலெனும்
பெருநிலைத் தாண்டவம் பெருமாற்கி லாதலின்
வேருே உடஞே விளம்பல் வேண்டும்
சீறி யருளல் சிறுமை யுடைத்தால்

பேரொளி வடிவினர், எத்தகைய துன்பங்களும் இன்றி அவற்றிற்கு அப்பாற்பட்டவர். எல்லாவற்றுக்கும் மேலான வர். இங்ஙனம் மலங்களைக் கடந்து மலரகிதராக உள்ள தாங்கள் மலங்களுக்கு உட்பட்டு மலசகிதராக உள்ள என்போன்ற உயிர்களுடன் கூடி நிற்பது எங்ஙனம்?

யாம் நின்னேடு கூடி நிற்பதில்லை; நின் அறிவுக்கு வேருக நின்று நினக்கு அறிவித்துக் கொண்டு நிற்போம் என்று, தேவரீர் அருளிச் செய்தால்;

அங்ஙனம் உயிர்களாகிய எம்மின் வேறுபட்டு நிற்கும் தங்களுக்குச் சர்வ வியாபி (எல்லாவற்றிலும் கலந்து பரவி வியாபித்து நிற்பவர்) என்னும் சிறப்பு இல்லையாய் ஒழியும்; அதுமட்டுமின்றி அடியேனுக்கும் தங்களுடன் இரண்டறக் கலத்தலாகிய சாயுச்சியம் என்கின்ற பரமுத்தி நிலை கிடை யாமற் போகும். அது அன்றியும், தாங்கள் உலகப் பொருள்கள் எல்லாவற்றிலும் கலந்து வியாபித்து நிற்கும் பெருநிலையை, " இருநிலனய்த் தீயாகி நீருமாகி இய மானனய் எறியும் காற்றுமாகி, அருநிலைய திங்களாய் ஞாயிருகி ஆகாசமாய் அட்ட மூர்த்தியாகி " என விளக்கித் திருநாவுக்கரசரின் திருத்தாண்டகம் கூறுகின்ற பரிபூரண நிலை, தங்களுக்கு இல்லை என்று ஆகும்.

அறியாது கூறினே அபக்குவ பக்குவக்
குறிபார்த் தருளினம் குருமுத லாயெனின்
அபக்குவ மருளினும் அறியேன் மிகத்தகும்
பக்குவம் வேண்டிற் பயனிலை யென்றால்
பக்குவ மதனாற் பயன்நீ வரினே
நின்னைப் பருவம் நிகழ்த்தா தன்றே
தன்னைப் பாரிலி யென்பதுந் தகுமே

ஆதலின், தாங்கள் எனக்கு அறிவிக்குங்கால், எனக்கு வேறாய் நின்று அறிவிப்பீரோ? அல்லது என்னோடு ஒன்று கூடி உடனாய் நின்று அறிவிப்பீரோ? இதனை ஐயப்பாடு அற அருளிச் செய்தல் வேண்டும்.

வேறாய் நின்று அறிவித்தல், உடனாய் நின்று அறிவித்தல் என்பன பற்றிய ஐயம் ஒருபுறம் இருக்க; தாங்கள் எனக்கு என் பக்குவ நிலையில் அறிவிக்கின்றீரா? அல்லது அபக்குவ நிலையில் அறிவிக்கின்றீரா?

அபக்குவ நிலையில் அறிவித்தால், தாங்கள் அறிவித்தாலும், யான் என்னுடைய அபக்குவ நிலையினால், எதனையும் அறிதல் இயலாது. தாங்கள் எனக்கு அறிவிப்பதற்குப் பக்குவம் வேண்டப்படுமாயின், அப்போது தங்களால் எனக்குப் பயனில்லை என்றாகும். அற்றன்று, உயிர்களின் பக்குவத்திற் கேற்ப, அப்பக்குவங்களின் பயனாக யான் எழுந்தருளி அறிவிப்பேன் என்றால், பக்குவம் என்பது அறிவில்லாத ஒரு சடநிலை ஆதலினால், அது தங்களை என்பால் வருவிக்கமாட்டாது. அவ்வாறன்று, பக்குவ நிலை என்பதுதான் எம்மை நும்பால் எழுந்தருளச் செய்யும் என்றால், ஒருவகையில் அது நும்மை ஏவுகின்ற தலைமைப் பாடுடையதாகும். அப்போது வேத சிவாகமங்கள் நும்மை

25 மும்மலஞ் சடமணு மூப்பிள மையினீ
நின்மலக் பருவம் நிகழ்த்திய தார்க்கோ
உணர்வெழு நீக்கத்தை ஒதிய தெனினே

ஒப்புயர்வற்றவர், தனக்குவமை இல்லாதவர்என்று புகழ்ந்து கூறும் உரைகள் இழுக்காய் ஒழியும்.

அதுமட்டுமல்லாமல், ஆணவம் மாயை கன்மம்என்னும் மூன்று மலங்களும் சடப் பொருளாக இருத்தலின், அவற்றிற்குப் பக்குவம் வேண்டுவதில்லை. ஆன்மா அச்சுமாறி எடுத்த உடல்தோறும், தான் சார்ந்ததன், வண்ணமாகி நின்று, மூப்பு இளமை முதலிய பல்வேறு மாறுதல்களைப் பெற்று வருவதனுல், அதற்கும் பக்குவம் என்பது கூடாது. தாங்களோ தேக சம்பந்தம் இல்லாமல் அமல நிலையில் விளங்குபவர். ஆதலால் பக்குவநிலை என்பது பதி பசு பாசம் என்னும் மூன்றனுள் யாருக்கு உரியது?

ஆன்மாக்களுக்கு அறிவு உண்டாகும் நிலையில், புண்ணிய பாவங்கள் ஆகிய இருவினை யொப்பு ஏற்பட்டு மலம் நீங்கப் பெறுகின்ற நிலையை அடைதலே பக்குவம் என்றுல், தாங்கள் இணையில்லாதவராக விளங்குகின்றீர் என்பதை யான் அறியுமாறில்லை.

மல நீக்கமே பக்குவமெனில், அம்மலம் தானே நீங்குகின்றதா? அல்லது அதனை யான் நீக்கிக் கொள்கின்றேனு? மலம் தானே நீங்கினுலும், யான் அதனை நீக்கிக்கொண்டாலும், தங்களுடைய உதவி எனக்குத் தேவையில்லாமல் போகும். தங்களுடைய உதவி எனக்கு எப்போதும் இன்றியமையாதது என்று யான் நன்கினிது உணர்தலினுல், அதுவும் எனக்குப் பொருத்தமாகப் புலப்படவில்லை. ஆதலின் எனது இவ் ஐயத்தினை நீக்கும் வகையில் தாங்கள் எனக்குத் தெளிவுரை கூறியருளுதல் வேண்டும்"

இணையிலி யாயினை என்பதை அறியேன்
யானே நீக்கினுந் தானே நீங்கினும்
கோனே வேண்டா கூறல் வேண்டும்
காண்பார் யார்கொல் காட்டாக் காலெனும்
மாண்புரை உணர்ந்திலை மன்ற பாண்டியன்
கேட்பக் கிளக்குமெய்ஞ் ஞானத்தின்
ஆட்பா லவர்க்கருள் என்பதை யறியே. 2

என்று இவ்வாறு பல ஐயங்களை அருள்நந்தி சிவாசாரியார் தெரிவித்துக்கொள்கின்றார். அவற்றிற்கு ஆசிரியர் மெய்கண்டார் அருளிய தெளிவுரையையும், இப்பாடலின் இறுதி அடிகளில், அருள்நந்தி சிவாசாரியார் பின்வரும் கருத்தமையச் சுருக்கமாகக் குறிப்பிட்டருள்கின்றார்.

மலம் தானாகவும் நீங்காது; நீயே அதனை நீக்கிக் கொள்ளவும் இயலாது. மலம் நீங்கும் நிலையை உண்டாக்கி நினக்குப் பொருள்களை அறிந்து அறிவித்துக் காட்டி உதவிபுரிவது யாமே யாவோம்.

“ ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே?
அடங்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே?
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே?
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே?
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே?
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே?
காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே?
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே?

எனவரும் திருநாவுக்கரசர் திருத்தாண்டகத்தில் "காண்பார் யார்? கண்ணுதலாய்க் காட்டாக் காலே" என்றபடி, சிவன் காட்டினாலன்றிச் சீவன் எதனையும் தானே காணவல்லதன்று.

அங்ஙனம் சிவன் காட்டுவனாயின், சீவர்கள் அனைவரும் ஒரே நிலையில் ஒருபடித்தாகப் பொருள்களை ஏன் உணர வில்லை என்றால், சிவன் எல்லா உயிர்களுக்கும் ஒருபடித் தாகவே உணர்த்தி அருளமுற்பட்டாலும், சீவர்கள் தமக்கே உரிய குறைபாட்டால் பொருள்களை ஒருங்காகவும் ஒரு படித்தாகவும் உணரும் திறமிலராக உள்ளனர்.

சூரியன் பகலிற் பொதுவாக ஒளிவீசினும் பிறவிக் குருடர்களுக்கு அது பயன்தருவதில்லை. கூகை ஒளிமிக்க பகலில் பொருள்களைக் காணமாட்டாமல், இருள்மிக்க இரவிலேயே பொருள்களைக் காணவல்லதாகின்றது.

இவ்வாறு உயிர்களின் தனித்தனி அறிவும் ஆற்றலும் வெவ்வேறு வகைப்பட்டு நிற்றலின், தடங்கருணைப்பெருங் கடலாகிய இறைவன், அவ்வவ் உயிர்களின் அறிவு ஆற்றல் தகுதிகளுக்கு ஏற்பவே, அவற்றிற்கு அறிவித்து அருள் புரிதல் இன்றியமையாததாகின்றது. இதுபற்றியே திரு ஞானசம்பந்தப்பெருமான், மதுரையில் பாண்டிய மன்னன் கேட்டு உணரும் பொருட்டு அருளிச் செய்த, மெய்ஞ் ஞானத்தை விளைவிக்கின்ற சிறப்புடைய திருப்பாசுரம் என்னும் திருப்பதிகத்தில்,

"ஆட்பா லவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில் அளவில்லை; கிளக்கவேண்டா;
கோட்பா லனவும் வினையும் குறுகாமை எந்தை
தாட்பால்வணங்கித் தலைநின்று இவைகேட்கத் தக்கார்"

பசு இலக்கணம்

அறிவறி யாமை யிரண்டும் அடியேன்
செறிதலான் மெய்கண்ட தேவே! - அறிவோ
அறியேனே யாதென்று கூறுகேன் ஆய்ந்து
குறிமாறு கொள்ளாமற் கூறு. 3

என்னும் திருப்பாடலினால், இறைவன் தான் ஆட்கொள்ளும் அடியவர்களின் தரமறிந்து அருள்புரியும் திறத்தினைக் குறிப்பிட்டருளியிருக்கின்றார். (2)

வி-உரை :- இந்நூலின் மூன்றாம்செய்யுளில் ஆன்மா அல்லது உயிர் எனப்படும் பசுவின் இலக்கணம் பற்றிய ஐயங்கள் விண்ணப்பித்துக் கொள்ளப்படுகின்றன.

"மெய்கண்டதேவர் பெருமானே! யான் ஒரு சில வற்றைச் சிலசில சமயங்களில் மட்டும் அறிகின்றேன். மிகப் பலவற்றைப் பலகால் அறியாமல் ஒழிகின்றேன். இவ்வாற்றால் என்பால் அறிவும், அறியாமையுமாகிய இரண்டுமே செறிந்து விரவி நிற்கக் காண்கின்றேன். இவ்விரண்டில் யான் அறிவை உடையவனா? அல்லது அறியாமையையே உடையவனா? இவ்விரண்டில் எனக்கே உரிய இயல்பான பண்பு எது? அருள்கூர்ந்து இதனை எனக்கு ஆராய்ந்து காட்டித் தெளிவுறுத்தி அருளுதல் வேண்டும்".

ஆன்மா சிவத்தைப் போல அறிவும் அன்று. சடப் பொருளாகிய பாசத்தைப் போல அறிவில்லாததும் அன்று. தானே அறியாமல், அறிவித்தால் அறிந்து கொள்ளுகின்ற இயல்பை உடையது ஆன்மா. ஒருவாற்றான் அறிவும், பிறிதொருவாற்றான் அறியாமையும் உடையது ஆன்மா. இது பற்றியே ஆன்மாவிற்குச் சதசத்துஎன்றும், சிதசித்து என்றும் பெயர் வழங்கும். (3)

பாச இலக்கணம்

கூறிய மூன்று மலத்தின் குணக்குறி
வேறு கிளக்கின் விகற்பங் கற்பங்
குரோதம் மோகங் கொலையஞர் மதநகை
விராவெண் குணனுமா ணவமென விளம்பினை
அஞ்ஞா னம்பொய் அயர்வே மோகம்
பைசா சூனியம் மாச்சரி யம்பய
மாயவேழ் குணனும் மாயைக் கருவினை

வி-உரை:- இந்நூலின் நான்காம் பாடலில் ஆணவம் மாயை கன்மம் என்னும் மூவகைப் பாசங்கள் பற்றிய ஐயங்கள் விண்ணப்பித்துக்கொள்ளப்படுகின்றன:

"ஆசிரியர் பெரும! தாங்கள் முன்பே எனக்குக் கடவுள் - உயிர் - உலகம் (பதி - பசு - பாசம்) என்னும் முப்பொருள்களின் இயல்பை உபதேசித்தருளிய போது, ஆணவம் - மாயை - கன்மம் என்னும் மூன்று மலங்களைப் பற்றிக் குறிப்பிட்டருளினீர்கள்.

அவற்றுள் ஆணவமலமானது, விகற்பம் (பிறபொருள்களினின்று தன்னை வேறுபடுத்திக்கொண்டு நிற்றல்), கற்பம் (எதனையாவது தானே எண்ணரிக் கற்பனைசெய்து கொண்டு நிற்றல்), குரோதம் (எதனையாவது கோபித்தல்), மோகம் (எதனையாவது விரும்பிக் காமுற்றிருத்தல்), கொலை (பிற உயிர்களை வருத்திக் கொல்லுதல்), அஞர் (துன்பம் நேர்ந்தால் கவலைப்படுதல்), மதம் (நினைவு சொல் செயல்களால் செருக்குற்று நிற்றல்), நகை (பிறரையும் பிற பொருள்களையும் இகழ்ந்து திரிதல்), என்னும் எட்டு இயல்புகளை உடையது.

இருத்தலுங் கிடத்தலும் இருவினை யியற்றலும்
விடுத்தலும் பரநிந்தை மேவலென் றெடுத்த
அறுவகைக் குணனுங் கருமத் தருவினை
ஆங்கவை தானும் நீங்காது நின்று
தன்வழிச் செலுத்தித் தானே தானாய்
என்வழி யென்பதொன் றின்று மன்ன

மாயையானது அஞ்ஞானம் (பொருளல்லதனைப் பொருளென்று கொள்ளுதல்), பொய் (மன மொழி மெய்களில் செப்பமின்மை), அயர்வு (ஒன்றை மறந்தும் மயங்கியும் வருந்துதல்), மோகம் (புல்லிய பொருள்களை விரும்பி உழலுதல்), பைசாசூனியம் (ஒரு பொருளின் மேற்கொண்ட தீய வேட்கையை ஒளித்தல்), மாற்சரியம் (பிறர்பால் பகைமை பாராட்டுதல்), பயம் (அஞ்சத் தகாதனவற்றிற்கு அஞ்சுதல்) என்னும் ஏழு குணங்களையுடையது;

கன்ம மலமானது, இருத்தல் (ஏதேனும் ஒவ்வோர் இடத்தைப் பற்றி இருத்தல்), கிடத்தல் (நோயாய்க்கிடத்தல்), இருவினை இயற்றல் (புண்ணிய பாவங்களைச் செய்தல்), விடுத்தல் (ஒவ்வொரு பொருளின்பாற் கொண்ட பற்றை நீக்குதல்) பரநிந்தை (தானல்லாத அனைவரையும் நிந்தித்துப் பழித்தல்) மேவல் (இழிந்ததனையும் இழிந்தவர்களையும் விரும்பிச் சேர்தல்) என்னும் ஆறு குணங்களை யுடையது என்று கூறியருளினீர்கள்.

இம்மூவகை மலங்களும் என்னைவிட்டு, நீங்காமல்நின்று தம் வழியில் என்னை இழுத்துக்கொண்டு சென்று தீயன வற்றிற் செலுத்தி என்னைத் தம் வயமாக்கி அடிமைப் படுத்திக்கொண்டு, என்னைப் பலவகைகளிலும் அலைத்து வருகின்றன.

ஊரும் பேரும் உருவுங் கொண்டென்
ஊரும் பேரும் உருவுங் கெடுத்த
பெண்ணை சூழ்ந்த வெண்ணையம் பதியிற்
சைவ சிகாமணி மெய்யர் மெய்ய!
மும்மலஞ் சடமென மொழிந்தனை அம்ம!
மாறுகோள் கூறல் போலும் தேறுஞ்
சடஞ்செய லதனைச் சார்ந்திடு மெனினே
கடம்பட மதனுட் கண்டிலம் விடம்படும்

இத்தகைய மலங்களினின்று என்னை விடுவித்துக் காத்தருளுதற் பொருட்டு, ஊரும் பேரும் உருவமும் கொண்டு, பெண்ணையாறு சூழ்ந்து ஓடுகின்ற திரு வெண்ணெய்நல்லூரில் மெய்கண்டதேவர் என்னும் திருப் பெயரும் வடிவமும்கொண்டு எழுந்தருளி, என்னுடைய ஊரும் பேரும் உருவமும் நீங்குமாறு, எனக்குப் பிறப்பு இல்லாதபடி செய்து காத்தருளிய சைவசிகாமணியே! மெய்யருள் மெய்யனே!

ஆணவம் மாயை கன்மம் ஆகிய மூன்று மலங்களும், சடப்பொருள்கள் என்று கூறியருளினீர். அது பொருத்த மில்லாத மாறுகோள் உரைபோல எனக்குத் தோன்று கிறது. மும்மலங்களும் சடமாயின், அறிவில்லாத அவைகள் என்னை வருத்துதல் எங்ஙனம் இயலும்!

சடப்பொருள்களுக்குத் தாமே செயற்படும் திறம் இல்லை என்பதனைக் கடம் (குடம்) படம் (துணி) ஆகிய சடப்பொருள்களால் அறிகின்றோம். அவைகள் தமக்கென ஒரு செயலும் உடையனவாகக் காணப்படவில்லை.

அற்றன்று; சடப்பொருளுக்கும் செயல் உண்டு. விடம் (நஞ்சு) ஒரு சடப்பொருளேயாகும். ஆயினும், அவ்விடம்

ஊன்திரள் போன்ற தாயின் தோன்றி
யணைந்தாங் ககறல் வேண்டும் குணங்களும்
பன்மையின் ருகும் எம்மைவந் தணைதரத்
தானே மாட்டா தியானே செய்கிலன்
நீயோ செய்யாய் நின்மல னுயிட்(டு)
இயல்பெனிற் போகா தென்றும் மயல்கெடப்
பந்தம் வந்த வாறிங்(கு)
அந்த மாதி யில்லாய் அருளே. 4

ஓர் உயிரின் ஊன்திரளிற் கலந்து அதனைக் கொல்லுதலைக் காணுகின்றோமே எனின்,

நஞ்சானது ஓர் உடலில் கலந்து வருந்திப் பின்னர்த் தன் ஆற்றலும் குன்றி நீங்கி விடுகின்றது; அது போல இம்மலங்களும் சில காலம் இருந்து பின்னர்த் தாமே நீங்கி ஒழிதல் வேண்டும்; அதுமட்டுமின்றி நஞ்சானது உயிர்களைக் கொல்லுதலாகிய ஒரு பண்பும் செயலும் மட்டுமே கொண்டுள்ளது. ஆனால் இம்மலங்களோ பல்வேறு வகை வகையான இயல்புகளைக் கொண்டுள்ளன. ஆதலின் மலங்களுக்கு விடத்தை உவமையாகக் கொள்ளுதல் திருஷ்டாந்த விரோதம்என்னும் குற்றமுடையதாகின்றது.

மலம் சடமாயின், அது தானே வந்து உயிர்களாகிய எம்மைச் சாராது. கொடிய மலத்தின் சேர்க்கையை யானும் விரும்பி உண்டாக்கிக் கொள்ளமாட்டேன். தேவரீர் மலங்களுக்கு அப்பாற்பட்டவராதலால், தாங்கள் எனக்கு அவற்றை உண்டாக்கியிருக்கமாட்டீர்.

மலங்கள், ஆன்மாக்கள் உள்ள அன்றே அவற்றிற்கு இயல்பாக அமைந்து கிடப்பவை என்றால், பாலில் வெண்மையும், கரியில் கறுப்பும் போல, மலங்களும் உயிர்களுக்கு இயல்பாக உள்ள இயற்கைப் பண்புகளாய், ஒரு காலத்திலும் அவைகளை விட்டு நீங்கி அழியமாட்டா.

பாச தரிசனம்

அருள்முன்பு நில்லா தடியேற்குக் கண்ணின்(று)
இருள்கண்ட வாறென்கொல் எந்தாய்!–மருள்கொண்ட
மாலையா வெண்ணெய்வாழ் மன்னவா! என்னுடைய
மாலையா மாற்ற மதி. 5

ஆதலின் இத்தகைய கொடிய பாச பந்தங்களாகிய, மலங்கள் உயிர்களாகிய எம்மைப் பற்றிக்கொண்டது எங்ஙனம் என்பதை விளக்கியருளுதல் வேண்டும்!"

பாசம் தானாகவும் உயிர்களைப் பற்றிக்கொண்டதில்லை. உயிர்களும் பாசத்தை விரும்பிச் சென்று சேர்ந்துகொள்ள வில்லை. இறைவனும் உயிர்களை மலங்களோடு சேர்த்து வைக்கவில்லை. நெல் உள்ள அன்றே உமி அதனோடு உடனுயினாற் போலவும், செம்பு உள்ளவன்றே களிம்பு அதனோடு உடனுயினாற் போலவும் உயிர்கள் உள்ள அன்றே அவற்றிற்கு மலச் சேர்க்கை ஏற்படுவதாயிற்று என்பது விடை. (4)

வி–உரை :- எனது ஞானத்தந்தையே! மருள் என்னும் குறிஞ்சி யாழ்த் திறமாகிய பண்ணினை வண்டுகள் இருந்து பாடுகின்ற மாலையினை அணிந்தவரே! திருவெண்ணெய் நல்லூரில் வாழ்கின்ற ஞானப் பேரரசரே! மேற்கூறிய பாசமாகிய மலங்கள் அஞ்ஞானம் ஆதலால், மெய்ஞ்ஞான வடிவமாகிய தங்களுடைய திருமுன்னர் நிற்கமாட்டா. அடியேனுக்குச் சுதந்திரமாகக் காணும் அறிவு இல்லை. இவ்வாறு இருக்கவும், அடியேன் அஞ்ஞான இருளாகிய மலத்தினை அறிந்த தன்மை எவ்வாறு? அருளுடைய பெரியோய்! இந்த ஐயத்தினை எனக்குப் போக்கியருளுதல் வேண்டும்.

15

பசு தரிசனம்

மதிநுதல் பாக னாகிக் கதிதர
வெண்ணைத் தோன்றி நண்ணியுள் புகுந்தென்
உளம்வெளி செய்துன் அளவில் காட்சி
காட்டிஎற் காட்டினை எனினும் நாட்டிஎன்
நுண்மையும் பெருமையும் நுவலின் அண்ணல்

ஆன்மா, தனக்கு வேறான உலகத்தைத் தனக்கு அறிவித்துத் தன்னின் வேறாகி நிறைந்து நிற்கின்ற திருவருளை பெத்தகாலத்தில் அறியாது. ஆனால் அது பின்னர் முத்தி நிலையில் சிவமுதல்தானே எங்கும் வியாபித்து நிற்கின்ற தன்மையை உணரப்பெறும். அதுபோலப் பெத்த நிலையில் ஆன்மா ஆணவ மல இருளால் பிணிப்புண்டு அதனை அறியாமல் கிடக்கும். ஆயினும் முத்தி நிலையில் திருவருள் இன்பத்தில் திளைக்கின்றபோது, இதுகாறும் இத்தகைய பேரின்பத்தை அனுபவிக்கப் பெறாதிருந்தோமே அதற்கு யாது காரணம் என்றுகருதி உணர முற்படுங்கால், ஆணவ மலத்தின் இயல்பை அனுமானப் பிரமாணத்தினால் திருவருளின் துணையால் அறிந்துகொள்ளும் என்பது கருத்து. (5)

வி-உரை :- எட்டாம் பிறைச் சந்திரனைப் போன்ற அழகிய திருநெற்றியையுடைய அம்பிகையை ஒரு பாகத்திற் கொண்டவரே! எனக்கு வீடு பேற்றை அளித்தற் பொருட்டுத் திருவெண்ணெய்நல்லூரில் தோன்றியவரே! எளியேனுடைய உள்ளத்திலே வந்து புகுந்து, அறியாமை இருள் அடைந்து கிடந்த அவ்வுள்ளத்தில், சிவஞான ஒளி பெருகச் செய்தவரே! அளவு படுத்த இயலாத பதிப் பொருளின் இயல்பினைக் காட்டியருளி அவ்வாற்றால் எளியேனுடைய இயல்பினையும், யான் காணுமாறு எனக்குத் திருவருள் புரிந்தருளிய பெருந்தகையே!

பாதாள சத்தி பரியந்த மாக
ஓதி யுணர்ந்த நானே ஏக
முழுத்தும்நின் றனனே முதல்வ! முழுத்தும்
புலன்கடைப் பூழை நுழைந்தனன் கலங்கி
ஆங்கைந் தவத்தையும் அடைந்தனன் நீங்கிப்
போக்கு வரவு புரிந்தனன் தூக்கி
எவ்விடத் துண்மையும் இவ்விடத் தார்தலுஞ்
செல்லிடத் தெய்தலுந் தெரித்த மூன்றினுள்
ஒன்றெனக் கருளல் வேண்டும் என்றும்

நூல்களைக் கற்றறிந்த அடியேன், என் அறிவுசென்று அறிந்த பொருள்களிலெல்லாம், பாதாள சத்தி பரியந்த மாக முழுவதும் கலந்து நிறைந்து நின்றேன். அங்ஙனம் என் அறிவால் முழுதும் கலந்து நிறைந்து நின்றும், ஒன்றை அறியுமிடத்து ஐம்புலன்களாகிய சிறுதுளைகளில் நுழைந்து கூடியே அறிந்தேன்; அங்ஙனம் அறிகின்ற அறிவையும்விட்டு நீங்கி மயங்கியவிடத்து சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்து அவத்தைகளின் வயப்பட்டு நின்றேன். அவ்வாறு அவத்தைப்படுவதற்கு ஏதுவாகிய ஓர் உடலைவிட்டு நீங்கிய நிலையில் மற்றும் ஒரு உடலில் சென்று புகுந்து நின்றேன்.

இவற்றைத் தேவரீர் திருவுள்ளத்தில் ஆராய்ந்தருளி, அடியேன் ஓதி உணர்ந்த இடமெங்கும் விரவிக்கலந்து நிற்றல், இப்பொழுது இவ்வுடலிற் கூடி நின்று வாழ்ந்து இதன்கண் ஐந்து அவத்தைப்படுதல், இவ்வுடலின் தொடர்ச்சியைவிட்டு நீங்கிப் புண்ணிய பாவங்களுக்கு ஏற்பச் சுவர்க்க நரகங்களிலே சென்று அவற்றின் பயனை நுகர்தல் ஆகிய மூன்று பகுதியுள்ளும், ஆன்மாவிற்குரிய இயல்பான தன்மை எது? என்பதை விளக்கியருளுதல் வேண்டும்.

இல்ல திலதாய் உள்ள துளதெனுஞ்
சொல்லே சொல்லாய்ச் சொல்லுங் காலைச்
சிறுத்தலும் பெருத்தலு மிலவே நிறுத்தி
யானை யெறும்பி னுளது போலெனின்
ஞான மன்றவை காய வாழ்க்கை
மற்றவை யடைந்தன வுளவெனின் அற்றன்று
விட்ட குறையின் அறிந்து தொன்று
தொட்டுவந் தனவென வேண்டும் நட்ட
பெரியதிற் பெருமையுஞ் சிறியதிற் சிறுமையும்
உரியது நினக்கே உண்மை பெரியோய் !

இம்மூன்றனுள் ஒன்றன்று, இம்மூன்றுமே ஆன்மாவுக்குரிய இயல்புகளாகும் என்று தாங்கள் அருளிச்செய்தால்—, "இல்லது இல்லதே, உள்ளது உள்ளதே, இல்லது உள்ளதாகாது, உள்ளது இல்லதாகாது" என்னும் சற்காரிய வாதக் கொள்கைக்கு ஏற்ப, ஆன்மாவானது ஒருபோது அணுவாகச் சிறுகியும், பிறிதொருபோது மலையாகப்பெருகியும், மாறிமாறி வருதல் பொருந்தாது.

அற்றன்று; ஆன்மா ஒரு தன்மையாகக் கலந்து நிறைந்து நிற்பினும், யானையின் உடலிற் புகுந்து பெரியதாகியும், எறும்பின் உடலிற் புகுந்து சிறியதாகியும் நிற்றல் போல்வது இது என்று தாங்கள் கூறியருளினால்—, அது ஆன்மாவின் ஞான நிலையினைக் குறிக்காமல் உடம்போடு கூடிய காய வாழ்க்கையினை மட்டும் உணர்த்துவதேயாகும்.

அவ்வாறன்று, ஆன்மாக்கள் வினைக்கு ஏற்ப ஓர் உடலைக் கூடி, அதன் இயல்பிற் கேற்பப் பெரியதாகியோ, சிறியதாகியோ அறிவு தொழிற்பட்டு நிற்கும் என்றால், ஆன்மாவானது தான் எய்திய பிறவிக்கும் உடலுக்கும் ஏற்றபடி அறிவாய் இருக்குமாயின், அது முன்னே தான்

எனக்கின் ருளும் என்றும்
மனக்கினி யாயினி மற்றது மொழியே. 6

அவத்தைகளின் நிலை

மொழிந்த அவத்தை முதலடியேன் நின்றாங்(கு)
ஒழிந்தன நான்கும் உணர — இழிந்தறிந்(து)
ஏறிற்றிங் கில்லை எழில்வெண்ணெய் மெய்த்தேவே!
தேறிற்றென் கொண்டு தெரித்து. 7

எடுத்து விட்டு நீங்கிவந்த பிறவிகளையும் உடலையும் இன்னது இன்னது என்று அறிதல்வேண்டும்.

ஆன்மா தான் கூடிய உடலின் பெருமைக்கும் சிறுமைக்கும் ஏற்பவே அறிந்து தொழிற்படும் என்றால்—, அவ்வியல்பு பெரியதிற் பெரியதாயும், சிறியதிற் சிறியதாயும் விளங்கவல்ல பதிப்பொருளாகிய தங்களின் இயல்பிற்குப் பொருந்துமேயன்றி, தனக்கென ஒரு சுதந்திரம் இல்லாத ஆன்மாவிற்குப் பொருந்தாது. ஆதலின் ஆன்மாவிற்குரிய உண்மையியல்பினைத் தாங்கள் எனக்கு விளக்கியருளுதல் வேண்டும்.

ஒரு படிகமானது, தான் எந்தவண்ணத்தினைச்சார்ந்து நிற்கின்றதோ அதன் வண்ணமாகி நிற்றல்போல, ஆன்மாவும் தான் எந்தப் பொருளினைச் சார்ந்து நிற்கின்றதோ, அதன் தன்மையைப் பெற்று விளங்கும்; கன்மத்துக்கு ஏற்பத் தான் கூடிய உடலின் அளவிற்கு இயைய வியாபித்து நின்று, தன் அறிவு இயங்கப்பெறும். "செறிந்திடும் உடலுள் மன்னிச், சேர்புலன் வாயில் பற்றி அறிந்து, அதில் அழுந்தும்" என உணர்க. (6)

வி-உரை:- திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்ட தேவரே! சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம்

என்னும் அவத்தைகள் ஐந்தினும், முதல் அவத்தையாகிய சாக்கிரம் என்னும் விழிப்பு ஆகிய நனவுநிலையில் அடியேன் நின்ற இடத்தில், மற்றைய சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் நான்கு அவத்தைகளையும் யான் அறிவதில்லை. அந்நிலைகளில் கருவிகள் குறைதலும் மிகுதலுமாகிய தன்மையையும் யான் உணர்வதில்லை. ஆதலின், நனவுநிலை ஒழிந்த ஏனைய நான்கு அவத்தை நிலைகள் உண்டு என்று யான் அறிவது எங்ஙனம்? என்று அருளிச் செய்தல் வேண்டும்.

ஆன்மாவிற்கு அதன் கன்மத்திற்கு ஈடாக உடம்பு வந்து கூடுகின்றது. உடம்பொடு கூடிநின்றே ஆன்மாக்கள் தத்தம் கன்மங்களின் பயனை அனுபவிக்கின்றன. அங்ஙனம் அனுபவிக்குங்கால், ஆன்மாவானது, இந்திரியங்களைக் கொண்டு, ஐம்பூதங்களின் இடமாக நின்று, பொருள்களை அறியும். அதுபோது ஆன்மா அனுபவித்தற்குரிய பொருளை மனம் சென்று பற்றும். ஆங்காரம் யான் நுகர்வேன் என்று எழும். புத்தி நிச்சயிக்கும். சித்தம் சிந்திக்கும். காலம் பொருள்களைக் கூட்டுவிக்கும். நியதி வரையறைசெய்யும். கலை தொழிற்படுத்தும். வித்தை அறிவை எழுப்பும். அராகம் இச்சையை விளைவிக்கும். மாயை மயக்கும். புருடதத்துவம் நுகர்ச்சியில் அழுந்தச்செய்யும். சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் சத்தி சிவம் என்னும் சுத்த தத்துவங்கள், இத்தத்துவங்களைச் செலுத்தி இயக்கி நிற்கும்.

இவற்றால் புருவநடு கண்டம் இதயம் நாபி மூலம் என்னும் இடங்களில், முறையே சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் ஐந்து அவத்தைகளை ஆன்மா அடையும். அவற்றில் முறையே 35, 25, 3, 2, 1 ஆகிய கருவிகள் தொழிற்படும் என்பது கருத்து. (7)

ஆன்ம வியல்பு

தெரித்ததென் கொண்டெனை உருத்திர பசுபதி
செடிய னேனையும் அடிமை செய்யப்
படிவங் கொண்டு வடிவுகாட் டில்லாப்
பெண்ணை யாளும் வெண்ணை மெய்ய !
அவத்தையிற் றெரித்தன னாயின் அவத்தை
தெரிந்தாங் கிரித்தலு மிலனே திருத்துங்
காலம் முதலிய கருவி யாயின்
மாலும் பிரமனும் வந்தெனை யடையார்

வி–உரை :- திருவெண்ணெய்நல்லூரில் வாழ்கின்ற மெய்கண்ட தேவரே? ஆன்மா என்றொரு முதல் உண்டு என்பதை அறியும் வகை யாது?

சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தைகளை அடைந்து வருதலைக்கொண்டு, ஆன்மா என்ற ஒரு பொருள் உண்டு என்பதை அறியலாம் என்றால், அந்த அவத்தைகளை எய்தும்போது, யான் அவற்றை இன்னது இன்னது என்று அறிந்து, அவ் அவத்தைகளின் மறப்பை நீக்கிக்கொண்டேன் இல்லை.

அவத்தைகளின் மறப்பைக் காலம் நியதி முதலிய கருவிகள்தான் நீக்கும் என்றால், எனக்குப்பிறது உணர்த்துவது ஒன்று இல்லையாகும்.

மறப்பை நீக்கவல்லன எனப்பட்ட காலம் நியதி முதலிய கருவிகளின் இயல்பை ஆராய்ந்தால், ஒரு கருவி மற்றொரு கருவியை அறியாது. அன்றியும் அந்தக் கருவிகள் அறிவில்லாத சடப்பொருள்கள் ஆகும்.

ஓதுங் காலை ஒன்றையொன் றுணரா
சேதன மன்றவை பேதைச் செயலுமிச்
சேதன வானாற் செயல்கொள வேண்டும்நற்
போத மவற்றைப் புணர்வதை யறியேன்
கருவித் திரளினுங் காண்பதோ ரொன்றும்
ஒருவுத லறியேன் உணர்வில னாதலின்
சிற்கொடு கண்டன னாயின் எற்குக்
கருவி யாயினை பெருமையு மிலவே
யானே பிரமம் கோனே வேண்டா

அறிவாயுள்ள ஆன்மா அந்தக் கருவிகளுடன் கூடி நிற்க, அவை தொழிற்படும் என்றால், கருவியை உடைய ஆன்மாவின் துணையைக்கொண்டு தொழிற்படும் அறிவு, அந்தக் கருவிகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

என்னுடைய அறிவு அந்தக்கருவிகளைக் கூட்டுகின்றது அன்று. கருவிகள் எல்லாம் கூடிய சாக்கிர நிலையிலும், ஆன்மா சப்தம் பரிசம் ருபம் ரசம் கந்தம் (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்) என்னும் ஐப்புலன்களை, ஒவ்வொன்றாக அறிவதன்றி, ஒருங்கே அறிவதில்லை. அந்தக்கருவிகள் தொழிற்படும் நிலையினின்று நீங்குவதையும் அஃது அறிவதில்லை.

ஆன்மா பொருள்களை அறியுங்கால் தானே தனித்து ஒன்றையும் அறியாமல், பதிப்பொருள் அறிவித்தால் மட்டுமே அறியவல்லதாகும் என்றால்—, பதிப்பொருள் ஆன்மாவிற்குப் பொருள்களை அறிவிக்கின்ற வெறுங் கருவியாக முடியும். தலைவன் என்ற நிலையும் பெருமையும் பதிக்கு இல்லை என்றால், அந்நிலையில் பதிப்பொருள் கருவியாக அமைய, அதனைப் பயன் கொள்ளுகின்ற

இன்னுங் கேண்மோ மன்ன ! நின்னின்
முன்ன மென்றன் உணர்வில னாதலின்
என்னைக் காண்பினுங் காண்பல காணா(து)
உன்னைக் காண்பினுங் காண்பல உன்னோ(டு)
ஒருங்கு காண்பினுங் காண்பல அருந்துணை
கண்ட வாறே தெனது கண்ணே
அண்ட வாண ! அருட்பெருங் கடலே !. 8

ஆன்மா, தானே முதற்பொருள் என்னும் நிலையில் விளங்க முற்படும்.

பதிப்பொருள் அறிவிக்க ஆன்மா அறியுமாயின், அறிவிக்கின்ற பதிப்பொருளை எதிர்ப்பட்டு, ‘ நமக்கு அறிவிக்கின்ற முதல் இது ’ என்று அறியும் ஆற்றல் ஆன்மாவுக்கு இல்லை. பதிப்பொருளின் முன்னர் ஆன்மாவின் அறிவு முனைத்து நிற்றல் இல்லை. ஆதலின் ஆன்மா தன்னை அறியவோ, தலைவனை அறியவோ வல்லதன்று. தலைவனாகிய பதிப்பொருளோடு சென்று கூடி அறியும் தகுதியும் ஆன்மாவிற்கு இல்லை. இந்நிலையில் ஆன்மாவாகிய யான், என்னை அறிந்த தன்மை எவ்வாறு? என்பதனை அருட்பெருங் கடலாகிய தாங்கள் விளக்கியருளுதல் வேண்டும்.

பதிப்பொருளாகிய இறைவன் அருள் புரிதல் காரணமாகத் திருமேனி கொண்டு போந்து அறிவிக்க, ஆன்மா தனக்கென ஒரு சுதந்திரமின்மையை அறிந்து கொண்டு அறிவிக்கின்ற பதிப்பொருளின் அறிவின் வழி அடங்கி நிற்குமாயின், தன்னைத்தான் உணரப்பெறும். பதி அறிவித்தாலன்றி, ஆன்மா தானே எதனையும் அறிய வல்லதன்று என்பது கருத்து. (8)

துரியாதீத நிலை

கடலமுதே! வெண்ணைக்கரும்பே! யென்கண்ணே!
உடலகத்து மூலத் தொடுங்கச் — சடலக்
கருவியா தாங்குணர்த்தக் காண்பதுதான் என்னை
மருவியா தென்றுரைக்க மன். 9

பாசநீக்கம்

மன்னிய கன்மச் சமத்திடை மலங்களை
அன்னிய மாக்கி அருள்வழி யதனால்

வி-உரை :- கடலில் தோன்றிய அமுதம் போன்றவரே! திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்து, யாவர்க்கும் கரும்பைப் போன்று இனியவரே! எனக்குக் கண்போல விளங்கிப் பொருள்களை விளக்கிக் காட்டி அருள்பவரே! ஆன்மா உடலின்கண் மூலாதாரத்தில் ஒடுங்குங்கால், அஃது அறிவதற்குப் பயன்படும் கருவிகள்யாவை? அக்கருவிகளைக் கொண்டு ஆன்மா அந்நிலையில் எதனை உணர்கின்றது? என்பனவற்றை, அருள் கூர்ந்து தாங்கள் எனக்கு அறிவித்து அருளுதல் வேண்டும்.

ஆன்மா மூலாதாரத்தில் ஒடுங்குகின்ற துரியாதீத நிலையில், பிரகிருதி தத்துவம்கூடி நிற்றலால், அங்குக் காலம் நியதி என்னும் தத்துவங்கள் கருவியாக அமையும். ஆன்மா நாபியில் ஒடுங்கும் துரிய நிலையில் கலை வித்தை அராகம் என்னும் தத்துவங்கள் கருவியாகத் திகழும். (9)

வி-உரை :- பெண்ணையாறுபாய்கின்ற திருவெண்ணெய் நல்லூருக்குத் தலைவரே! கன்மங்கள் தமக்குள் சமநிலைப்பட்டு இருவினையொப்பு எய்திய நிலையில், நீரே எனது மலத்தினை

என்னுள் புகுந்தனை யெனினே முன்னைத்
திரிமலந் தீர்த்த தேசிக! நின்னோ(டு)
ஒருவுத லின்றி யுடந்தையே யாகும்
பெருநிலை யாகல் வேண்டும் மருவிடு
மும்மல மதனால் எம்முன்னின் நிலையெனின்
அம்மலத் திரிவுந் செம்மலர்த் தாள்நிழற்
சேர்தலு மிலவாய்ச் சார்பவை பற்றிப்
பெயர்விலனாகும் பெரும! நீர்வின்(று)

நீக்கி, ஆன்ம தரிசனம் நிகழ்வித்து எனக்கு உள்ளே புகுந்து உயிர்க்குயிராய் நின்றருளினீர். ஆதலின் நும்மை விட்டு நீங்காமல், நும்முடன் யான் என்றும் நிலைபெற ஒன்றி நிற்றல் வேண்டும்.

ஆணவம் மாயை கன்மம் என்னும் மும் மலங்களின் சேர்க்கையால், யாம் உன்னுடன் ஒன்றி நிற்றலிலம் என்று கூறுவீராயின், அம்மலங்கள் எளியேனை விட்டு எக்காலத்தும் நீங்காமல் நிலைபெறும். அதனால் என்றும் யான் நும்முடைய திருவடியைச் சேர்தல் இலனாகி, பிறப்பு இறப்புக்களிற்பட்டு உழலுவேன்.

அற்றன்று, பிறந்த பிறப்பிற்கு உரிய பிராரத்த கன்மம் அனுபவிக்கப்படுமேயன்றி, இனி உடலெடுப்பதற்குக் காரணமாக ஆகாமிய கன்மம் வளராது என்று அருளிச்செய்தால்—, பிராரத்த கன்மத்திற்கு ஈடாக எடுத்த உடல் உள்ளளவும், அதன் காரணமாகிய மாயை நீங்காது; மாயைஉளதாயின் கன்மமும்நீங்காது; மாயையும் கன்மமும் உளவாயின், ஆணவ மலமும் உண்டு எனப்படும்.

அமைந்த கருமத் தியைந்தவை யல்லது
சமைந்தன விலவெனச் சாற்றின் அமைந்த
மாயையங் கன்ம மாமல மூன்றும்
மாயா தாகவே யார்ச்சந மாயையின்
உற்பவந் தீரா வொழுகுமொன் றொன்று
நிற்சம மாயி னல்லது நிற்பெறல்
இல்லென மொழிந்த தொல்லறந் தனக்கும்
ஏயா தாகும் நாயே னுளத்து
நின்றனை யென்பனோ நின்றிலை யென்பனோ

இங்ஙனம் மூன்று மலங்களும் உளவானால், ஆகாமிய கன்மங்கள் வளர்ந்து அவற்றை அனுபவித்தற்பொருட்டு மேலும் மேலும் உடற்றொடர்ச்சி குன்றாமல் தொடர்ந்து இருந்துவரும். அவ்வாறாயின், புண்ணிய பாவங்கள் தம்மில் ஒன்றுக்கொன்று சமநிலை அடைதலாகிய இருவினை யொப்பு நேர்ந்தாலன்றி, இறைவனை ஆன்மாக்கள் எய்துதல் இயலாது, எனச் சமய தத்துவ நூல்கள் கூறும் கூற்றுப் பொருந்தாமற்போகும்.

ஆதலின், உடலின் தொடக்கு உற்று நிற்கின்ற அடியேனுக்குத் தேவரீர் தீக்கை முறைகளினால் பாசநீக்கம் செய்திருக்கவும், அடியேன் மீளவும் மலமாயை கன்மங்களுடன் தொடர்புற்று உழன்று வருந்துதலுக்கு, யாது காரணம்? என்று அருளிச் செய்தல் வேண்டும்.

ஆசாரியன் செய்யும் தீக்கையினால் சஞ்சித கன்மம் அழியும். உடலுள்ள அளவும் இன்ப துன்பங்களை அனுபவிப்பதனால், பிராரத்த கன்மம் நீங்கும். குருவருளாலும் திருவருளாலும் உண்டாகும் ஞானத்தின் மேலீட்டால் ஆகாமிய கன்மம் அழிந்தொழியும்.

பொன்றிய பொன்றிற் றிலமல மென்பனே
ஒன்றினை உரைத்தருள் மன்ற குன்றாப்
பெண்ணைப் புனல்வயல் வெண்ணைக் கதிபதி
கைகண் தலைவாய் கால்செவி மூக்குயர்
மெய்கொண் டென்வினை வேரறப் பறித்த
மெய்கண்ட தேவ ! வினையிலி!
மைகொண்ட கண்ட ! வழுவிலென் மதியே !. 10

அறிவும் அறியாமையும்

மதிநின்பா லிந்த மலத்தின்பால் நிற்க
விதியென்கொல் வெண்ணைவாழ் மெய்ய !—பதி [நின்பால்
வந்தா லிதின்வரத்தில் வந்திரண்டும் பற்றுகிலேன்
எந்தாய் இரண்டாமா றென். 11

இருவினை யொப்புக்கு உடல் முன்னிலையன்று, இன்பத்தில் விருப்பமும், துன்பத்தில் வெறுப்பும் அற்று, இரண்டையும் ஒன்றாக விருப்பு வெறுப்பின்றி ஏற்றுக்கொள்ளுகின்ற, நடுவு நிலைமையாகிய சாந்தம் என்னும் மன நிலைமையே, இருவினையொப்பு எனப்படும். அவ்விருவினையொப்பு என்னும் நிலை எய்துமாயின், இறைவனே குருவடிவில் வந்து அருள்புரிந்து காத்தருள்வன். பாசம் அழிவதில்லை. அதன் ஆற்றல் மட்டுமே அழிந்து நிற்கும் என்பது இப்பாடலின் கருத்து. (10)

வி—உரை :- திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளியிருந்து எம்மை வாழ்வித்தருள்கின்ற மெய்கண்டநாதனே, அடியேன் பெற்றுள்ள அறிவு, நின்பால் பெற்றதாகும்.

அவ்வவ் வமைவும் சார்பும்

எண்டிசை விளங்க இருட்படாம் போக்கி
முண்டக மலர்த்தி மூதறி வருளும்
மேதினி யுதய மெய்கண்ட தேவ!
கோதில் அமுத குணப்பெருங் குன்ற!

அங்ஙனமாகவும், கொடிய இந்த மலத்தின்பாற்பட்டு மயங்கிநிற்கும் முறைமை, எங்ஙனம் விளைந்தது? பதிப்பொருள் ஆகிய நும்பால் கூடினால், இந்த மலத்திலே வந்து கலந்து மயங்கி நிற்றற்குக் காரணம் இல்லை. மலத்தின்பால் சென்று கூடினால், பதிப்பொருள் ஆகிய நும்மைக் கூடுதற்கு வாயில் இல்லை. ஆதலால், அடியேன் ஒருவனே, நும்மோடு கூடி அறிந்தும், மலத்தோடு கூடி அறியாமலும், இங்ஙனம் இரண்டு வகையில் அதுவதுவாய் நிற்றற்கு ஏது என்னை? இதனை எனக்கு விளக்கியருளுதல்வேண்டும்!

உயிர் சார்ந்ததன் வண்ணமாகும் தன்மையுடையது. ஆதலின் அது பதிப்பொருளைச் சார்ந்தவழி அறிவு பெற்றும், பாசத்தைச் சார்ந்தவழி அறியாமையுற்றும் நிற்கும். இவற்றைப் பின்வரும் சான்றுகளால் உணரலாம்.

"சத்துஅசத்து அறிவது ஆன்மா;
தான்சத்தும் அசத்தும் அன்று;
நித்தனாய்ச் சதசத்து ஆகி
நின்றிடும் இரண்டன் பாலும்" — சித்தியார், 7 – 2.

"ஆசுபடு மலமாயை அருங்கன்மம் அனைத்தும்
அரனடியை உணரும்போது அகலும்; பின்அணுகும்"
— சித்தியார், 8 – 39.

(11)

வி–உரை :- எட்டுத் திசைகளும் விளக்கமுறும்படி இருளாகிய போர்வையினை நீக்கி, தாமரையினை மலரச் செய்து

என்னி னார்தலும் அகறலும் என்னைகொல்
உன்னிற் றுன்னி யுறுவிடிற் பெயர்குவை
யென்னு மதுவே நின்னியல் பெனினே
வியங்கோ ளாளனு மாகி இயங்கலும்
உண்டெனப் படுவை எண்தோள் முக்கண்
யாங்கணும் பிரியா தோங்குநின் நிலையின்
யான்வந் தணைந்து மீள்குவ னாயின்
ஆற்றுத்துய ருற்றோர் அணிநிழல் நசைஇ
வீற்றுவீற் றெழுதர வேண்டலும் வெறுத்தலும்

ஒளிபரப்புகின்ற உதய சூரியனைப் போல, உயிர்களின் அறியாமை இருளைப் போக்கி, உள்ளத் தாமரையினை மலரச் செய்து, சிவஞான ஒளியினைப் பரப்பி, உலகின் ஞான சூரியனாகத் திகழ்பவனே! மெய்கண்ட தேவனே! கோதிலா அமுதே! குணப்பெருங் குன்றே!

எங்கும் நிறைந்திருக்கின்ற தேவரீர், ஒருகால் என்னோடு கூடியும், பிறிதொருகால் என்னைவிட்டு நீங்கியும் நிற்பது எற்றுக்கு?

எம்மை நினைக்கும்பொழுது கூடியும், நினையாதபொழுது நீங்கியும் நிற்பது, எம்முடைய இயல்பு ஆகும். எனின்,

நீர் எனது ஏவற்றொழிலைச் செய்பவர் ஆவதுடன் எங்கும் நிறைந்திராமல் போக்கு வரவு புரிகின்ற ஒருசார் (ஏகதேசப்) பொருளும் ஆவீர்!

அற்றன்று, யாம் அசைவற நிற்க, நீதான் என்னோடு வந்து கூடியும், என்னைவிட்டுப் பிரிந்தும் நிற்பாய் என்பீராயின், எவ்விடத்தும் நீங்காமல் உயர்ந்தொளிரும் நும்முடைய நிறைவு நிலையில், யான் வந்து நும்மோடு கூடியும், நும்மை விட்டுப் பிரியவும் வேண்டுவதில்லை.

இன்றச் சாயைக்கு நன்றுமன் னியல்பே
அனையை யாகுவை நினைவருங் காலை
இந்நிலை யதனின் ஏழையேற் கிரங்கி
நின்னை வெளிப்படுத் தொளிப்பை நீயேல்
அருண்மா றாகும் பெரும! அஃ தன்றியும்
நிற்பெற் றவர்க்கும் உற்பவ முண்டெனுஞ்
சொற்பெறும் அஃதித் தொல்லுல கில்லை
அவ்வவை யமைவுஞ் சால்பும் மயர்வறச்
சொல்லிற் சொல்லெதிர் சொல்லாச்
சொல்லே சொல்லுக சொல்லிறந் தோயே. 12

வேண்டுமாயின், வழிநடந்து களைப்புற்றோர், வெயிலின் கடுமைக்கு அஞ்சி, மரத்தின் நிழலில் சென்று சேர்ந்து தங்கியிருந்து பிரியுங்கால், அம்மரம் அவர்கள் தன்பால் வந்தமை குறித்து மகிழ்ச்சியும், பிரிந்து சென்றமைபற்றி வருத்தமும் கொள்ளாமைபோல, தாங்களும் நும்மைக் கூடினோர்பால் அருளும், நீங்கினோர்பால் அருளின்மையும் அற்ற நிலையினர் ஆவீர்! மேலும் "சென்றணையும் நிழல் போலச் சிவன் நிற்பன் என்னில், சென்றணையும் அவனே முதன்மையுடையவனாக, சிவன் முதன்மையிலன் ஆவன்".

அவ்வாறன்று, போக்குவரவு இன்றியே யாம் நிற்போமாயினும், நீ நினைக்கும்பொழுது வெளிப்பட்டும், நினையாத பொழுது மறைந்தும் நிற்றல், எமக்கு இயல்புஎன்பீராயின், ஏழையேன் பொருட்டு இரங்கி வெளிப்பட்டு அருளிய நீர்தாமே, மீளவும் மறைந்துவிடுவீராயின், அது நும் அருட்டன்மைக்கு மாறுபடுவதாகும். அன்றியும் நும்மை அடைந்தவர்க்கும் மீளப் பிறப்புண்டு என்னும் இழுக்கு நேரும்.

ஆதலால் என் மயக்கம் தீரும்படி, சொல் எதிர் சொல்லாச் சொல்லாக, தாங்கள் விடையளித்தருளல் வேண்டும்.

(1) உடலில் உயிர் போலவும், கண்ணில் சூரியன் போலவும், ஆன்மாவில் ஆன்மஞானம் போலவும், சிவம் உயிர்களிற் கலந்து நிற்கும்.

(2) ஆயினும் உயிர்களுக்கு அநாதியே மலசம்பந்தம் உள்ளமையால், சிவம் அவைகள் நினைத்தபொழுது பிரகாசித்துக் கலந்தும், நினையாத பொழுது மறைந்து நீங்கியும் நிற்கும்.

(3) சிவம் தன்னியல்பில் எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பினும், மலபோதம் மேலிட்ட பொழுது ஆன்மாக்கள் சிவத்தைக் கலவாமலும், மலபோதம் தவிர்ந்தவழி சிவத்தினுடன் கலந்தும் நிற்கும்.

(4) சிவத்திற்கு இயல்பாகவே விருப்பு வெறுப்புக்கள் இல்லையாயினும், தன்கண் சார்ந்தார்க்கு நிழல்தரும் மரம் போல, தன்னை அடைந்த அன்பர்களுக்கு அருள்புரிந்து நலம் செய்யும்.

"நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன்" — திருவருட்பயன்.

"சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கு அல்லால்
நலமிலன் நாடொறும் நல்கு வான்நலன்
குலமிலர் ஆகிலும் குலத்துக்கு ஏற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே"

— திருநாவுக்கரசர்.

(12)

31

ஆயன்கோல் பாதவம்

இறந்தோய் கரணங்க ளெல்லாம் எனக்குச்
சிறந்தோ யெனினுமெய்த் தேவே!—பிறந்துடனும்
காயங் கொளவுங் கொளாமலும் கண்டதுநீ
ஆயன்கொல் பாதவத் தற்று. 13

வி—உரை :- மெய்கண்டதேவரே! கருவி கரணாதிகளைக் கொண்டு அறியும் அறிவுக்கு எட்டாமல் அகன்று நிற்கிற நீர், எனக்கு அக்கருவி கரணாதிகளை உண்டாக்கித் தந்தருளுவீர்; பிறந்தது முதல் உடனாய் உள்ள உடலை யான் மெய் என்று கொள்ளவும், பின்னர் அதனையே யான் பொய் என்றுஉணரவும், நீரேசெய்தருளினீர்: இடையன் வெட்டின மரம், பாதி பச்சையும், பாதி உலர்ந்ததுமாய் இருத்தல் போல, இன்னுடல் ஒருகால் மெய்யாகவும், பிறிதொருகால் பொய்யாகவும் தோன்றுவித்து, நீர் நீங்கியும் நீங்காமலும் உள்ளீர்! இஃது என்னே!

(1) இறைவன் 'கரணங்கள் எல்லாம் கடந்து நின்ற கறைமிடற்றன்' ஆதலின், "இறந்தோய் கரணங்கள்எல்லாம்" என்றார்.

(2) ஆணவ மலத்தில் அழுந்திக் கிடக்கும் உயிர்களுக்குத் தனு கரண புவன போகங்களை இறைவன் கொடுத்து உதவுதலால், "எனக்குச் சிறந்தோய்" என்றார்.

(3) 'என்உடல் பொறி பிராணன் கரணம் என்னுணர்வு' என்று கொண்டு மயங்கி நிற்றலால், 'பிறந்துடனும் காயம் கொளவும்' என்றும்; 'நின் அணி நீயும் அல்லவாயினை, காயம் நின்னில் அன்னியம் ஆகும்; உன்னை நீ

அறிந்து பாரே:' என்று தீக்கைக்காலத்து அறிவுறுத்துதலின், "கொளாமலும் கண்டதுநீ" என்று கூறினார்.

(4) உன்னாத போது நீங்கியும், உன்னியபொழுது நீங்காமலும், இறைவன் உயிர்களோடு உடனாய் நிற்றலின், "ஆயன்கொல் பாதவத் தற்று" என்றார். ஆயன் - இடையன். பாதவம் - மரம்.

(5) 'ஆயன்கொல் பாதவம்' என்பது வடமொழியில் "அர்த்த வைசச நியாயம்" எனப்படும். அர்த்தம் - பாதி. வைசசம் - வெட்டுதல், கொல்லுதல். இதனை 'இடையன் எறிந்த மரம்' எனத் தமிழ் நூலார் வழங்குவர். ஆடுகள் தழை கறிக்கும் பொருட்டு, ஆயர்கள் மரத்தின் கிளைகளை அம்மரத்திலேயே தொங்குமாறு வெட்டி, முறித்துத் தாழ வைப்பர். அவ்வாற்றான் அக்கிளைகள் வாடுதலுமின்றி வாழ்தலுமின்றி இடைநிலைப்பட்டுப் பெரிதுமிக வருந்தும். அத்தகைய இரண்டுங்கெட்ட பெருந்துன்பத்திற்கு, இதனை உவமையாக எடுத்துக் காட்டுவர். சிவபிரான் காமனை எரித்தபோது, கணவனை இழந்த இரதிதேவி, தான் 'இடையன் எரித்த மரம்' போலும் நிலையை எய்தியதாகக் கூறி இரங்கிப் புலம்பினள் என்பர்.

"அடையப் பயின்றார்சொல் ஆற்றுவராக் கேட்டால்
உடையதொன் றில்லாமை ஒட்டின்—படைவென்று
அடைய அமர்த்தகண் ஆயிழாய் அஃதால்
இடையன் எறிந்த மரம்" (224).

—பழமொழி நானூறு.

"கெடலருங் குரையகொற்றங் கெடப்பிறந்ததுவும்அன்றி
நடலையன் அடிகள் வைக, நட்புடை யவர்கள் நைய
இடைமகன் கொன்ற இன்னா மரத்தினேன் தந்த துன்பக்
கடலகத் தழுந்தவேண்டா; களைகஇக் கவலை!என்றான்"

—சீவகசிந்தாமணி.

கருமமும் கருமபந்தமும்

அற்றதென் பாசம் உற்றதுன் கழலே
அருட்டுறை யுறையும் பொருட்சுவை நாத!
வேறென் றிருந்த என்னை யான்பெற
வேறின்மை கண்ட மெய்கண்ட தேவ!
இருவினை யென்ப தென்னைகொல் அருளிய
மனமே காயம் வாக்கெனும் மூன்றின்
இதமே அஹிதம் எனுமிவை யாயின்
கணத்திடை யழியுந் தினைத்துணை யாகா

"ஊடியார் நலந்தேம்ப ஒடியெறிந்து அவர்வயின்
மால்தீர்க்கும் அவன்மார்பென் றெழுந்தசொல் [நோவேமோ?
முகைவாய்த்த முலைபாயக் குழைந்தநின் தார்எள்ள
வகைவரிச் செப்பினுள் வைகிய கோதையேம்"

—கலித்தொகை 68.

"ஒடிய எறிந்தென்பது, 'ஒடியெறிந்து' என விகாரம் [ஆயிற்று...
இடையன் கொன்ற மரம் ஆக்கி வைத்து...."

— நச்சினார்க்கினியர் உரை (கலி. 68.)

(13)

வி-உரை:- திருவருட்டுறை என்னும் திருவெண்ணெய் நல்லூர்த்திருக்கோயிலில்எழுந்தருளியிருக்கும்பெருமானே! நுமக்கு வேறு என்னும்படி இருந்த என்னை, யான் நுமக்கு வேறாகாதபடி ஆட்கொண்டருளிய மெய்கண்ட தேவரே! நும் திருவருளால் எனது பாசங்கள் அற்றன யான் நும் திருவடிகளை அடைந்துள்ளேன்.

காரணஞ் சடமதன் காரியம் அஃதால்
ஆரணங் காம்வழி யடியேற் கென்னைகொல்
செயலென தாயினுஞ் செயலே வாரா(து)
இயமன் செய்தி யிதற்கெனின் அமைவும்
பின்னையின் றாகும் அன்னது மிங்குச்

உயிர்களுக்குப் புண்ணிய பாவம் உண்டு என்றது எது பற்றி? உள்ளத்தின் நினைவாலும் நாவின் சொல்லாலும், உடலின் செயலாலும், நிகழும் விருப்பு வெறுப்புக்களால் இரு வினைகள் ஆகிய புண்ணிய பாவங்கள் விளைகின்றன என்பராயின், அந்த நினைவும் சொல்லும் செயலும் தோன்றியவுடனே அழிந்துபோம். அவற்றிற்கு ஒரு தினையளவு நேரமும் நிலைக்கும் தன்மையில்லை.

மேலும், அந்த மனம் வாக்குக் காயம் ஆகியவற்றின் செயற்காரணம், சடமாக இருப்பதுடன், அதன் காரியமாகிய இரு வினைகளும் சடமேயாகும். ஆதலின், அவைகள் உயிர்கள், மேலே எடுக்க உள்ள பிறவிகளில் வந்து பொருந்துமாறு யாங்ஙனம்?

காரணகாரியங்களாகிய கன்மங்கள் சடமாயினும், உயிர்களுக்கு அறிவுள்ளமையின், உயிர்களுடன் கூடுதலால் அவைகள் செயற்படக்கூடும் எனின்—, உயிர்களுக்கென உண்மையில் ஒரு செயலும் இல்லை. "என் செயலாவது யாதொன்றும் இல்லை, எல்லாம் உன் செயலே என்று உணரப்பெற்றேன்" என்றபடி, உயிர்களுக்குச் செயல் இல்லாதபொழுது உயிர்களைச் சார்வதனால், சடமான காரண காரியங்கள் செயற்படுமாறு யாங்ஙனம்?

உயிர்களுக்குச் செயல் உண்டு எனின்,— உயிர்களின் விருப்பப்படியே எல்லாச் செயல்களும் நிகழ்வதில்லை.

செய்திக் குள்ள செயலவை அருத்தின்
மையல்தீர் இயமற்குவழக்கிலை மன்ன
ஒருவரே யமையும் ஒருவா ஒருவற்(கு)
இருவரும் வேண்டா இறைவனும் நின்றனை
நின்னது கருணைச்சொல்லள வின்றே
அமைத்தது துய்ப்பின் எமக்கணை வின்றும்
உள்ளது போகா தில்லது வாரா(து)
உள்ளதே யுள்ளதெனு முறை யதனுற்

மேலும் உயிர்கள் செயல் செய்வதாயின்,—உயிர்களுக்கு இயம தண்டனைகிடைக்கும்படியான செயல்களை, உயிர்களே செய்துகொள்ளமாட்டா. அன்றியும், உயிர்கள் செயல்களைச் செய்துகொள்ள வல்லன ஆயின், நீர் உயிர்களுக்குச் செய்விப்பது ஏதும் இல்லை எனல் நேரும்.

அற்றன்று, உயிர்கள்செய்த வினைக்குத் தக்க பயனை, உயிர்கள் அனுபவிக்கும்படி யாம் செய்விப்போம் எனின், — உயிர்களைத் தண்டித்தற்கு இயமன் வேண்டுவதில்லை. அங்ஙனமன்று, உயிர்கள் செய்த வினைக்கு ஏற்ற பயனை நாமும் நுகர்விப்போம், இயமனும் தண்டிப்பான் எனில்; என் உயிர்களைத் தண்டித்தற்கு ஒருவரே அமையும். இருவர் வேண்டுவதில்லை. வேண்டும் எனில், நீர் சர்வ வல்லமை யுள்ளவர் என்பதற்கு இழுக்கு நேரும்.

அற்றன்று, அருள் செய்வதற்கு நாமும், தண்டிப்பதற்கு இயமனும் வேண்டும் எனில் - இயமன் மூலம் உயிர்களை யெல்லாம் தண்டிக்கச் செய்தல், நுமது அளவிலாக் கருணைத் திறனுக்கு அமையாது.

கொள்ளும் வகையாற் கொளுத்திடு மாயின்
வள்ளன் மையெலாம் உள்ளிட வமையும்
ஈய வேண்டு மெனும்விதி யின்றும்
ஆயினும் என்னை அருந்துயர்ப் படுத்த
நாயி னேற்கு நன்றுமன் மாயக்
கருமமுங் கரும பந்தமும்
தெருள அருளுஞ் சிவபெரு மானே. 14

இயமன் தண்டிப்பது, உயிர்கள் செய்த வினைகளுக்கு ஏற்பவேயாகும் எனின், நீர் அமைத்த வினைப்பயனையே, உயிர்கள் அனுபவிப்பதனால், அவற்றின் மூலம் உயிர்களுக்குப் புதிய வினைகள் விளையமாட்டா. "உள்ளது போகாது, இல்லது வாராது, உள்ளதே உள்ளது" என்பது சற்காரிய வாதம். ஆதலின் உள்ளதாகிய பிராரத்த வினையை நுகர்வது தவிர, மேல் வரும் பிறவிகளுக்கு இல்லதாகிய ஆகாமிய வினை நிகழ வாயில் இல்லை.

அற்றன்று, பிராரத்த வினையை நுகருங்கால், ஆகாமிய வினை உண்டாகும் எனின்—, தானங்களும் தவங்களும் செய்து புண்ணியங்களைப் பெறுதல் வேண்டும் என்று நூல்களில் விதிக்கவேண்டுவதில்லை, ஆதலின், எனக்கு அரிய துயரங்களை விளைவிக்கும் கன்மங்களும், கன்ம பந்தங்களும் ஏற்பட்ட தன்மையினை விளக்கியருளுதல் வேண்டும்.

(1) ஆன்மாக்களின் மன மொழி மெய்கள் வாயிலாக அவற்றிற்கு இருவினைகள் நிகழும். இவ்வுண்மை "உற்ற தொழில் நினைவு உரையில், இருவினையும் உளவாம்" என்னும் சிவப்பிரகாச செய்யுட் பகுதியால் (2 – 13) உணரப்படும்.

நின் அருள்தான் யாதுக்கு ?

மானமருஞ் செங்கைமதில்வெண்ணை வாழ்மன்ன!
போனவினை தானே பொருந்துமோ—யானதனில்
ஆவனே ஆக்காய் அமலனும் நின்னருள்தான்
தேவனே யாதுக்கோ தேர். 15

---

(2) இருவினைகளாகிய கருமத்தால் பந்தம்உண்டாகும் என்பது, " அறம் பாவம் என்னும் அரிய கயிற்றால் கட்டி " எனவரும் சிவபுராண வரியால் உணர்க.

(3) இயம தண்டனை உண்டு என்பது, " மடித்தாடும் அடிமைக் கண் அன்றியே" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த திருப்பதிகத்தில் " தருமனார்தமர் செக்கில் இடும்போது தடுத்தாட்கொள்வான் " என்று பல பாடல்களில் விதந்தெடுத்துக் குறிப்பிட்டுள்ள திறத்தால் தெளியலாம். மற்றும் போற்றிப் பஃறொடை என்னும் சைவசித்தாந்த நூலின் கண்ணும் இயம தண்டனையின் இயல்பு, பல வரிகளில் (82-100) விரிவாக விளக்கப்பெற்றுள்ளது.

(4) பிராரத்த வினையை நுகருங்கால் ஆகாமியவினை நிகழும் என்பது,

" பேறுஇழவு இன்ப மோடு பிணிமூப்புச் சாக்காடு என்னும்
ஆறும்முன் கருவுட் பட்டது; அவ்விதி அனுப வத்தால்
ஏறிடும்; முன்பு செய்த கன்மம்இங்கு இவற்றிற்கு ஏது;
தேறுநீ இனிச்செய் கன்மம் மேலுடற் சேரும் என்றே "

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுளால் செவ்விதின் விளங்கும். (14)

வி-உரை :- அழகியமதில்களையுடைய திருவெண்ணெய் நல்லூரில் வாழ்கின்ற ஞானப் பேரரசரே! மான் ஏந்திய சிவந்த திருக்கையை யுடைய சிவபிரானே ! முற்பிறவியில்

கருமம் அருத்தும் கடன்

தேரா துரைப்பன் தெருமர லுளத்தொடு
பேரா தருளுதல் பெரியோர் கடனே
நின்னைக் கலப்ப தென்னுண் மையெனின்
நின்னது நேர்மை சொல்மனத் தின்றே

யான் செய்த புண்ணிய பாவங்கள் ஆகிய வினைகள், தாமே வந்து அடியேனைக் கூடுமோ? அல்லது அந்த வினைகளை யான் சென்று கூடுவேனோ? நீ அமலன்; ஆகையால், வினைகளையும் என்னையும் கூடுமாறு செய்விக்க மாட்டாய்! இங்ஙனமாயின், நின்னுடைய அருள்தான் எதற்கு? இதனைத் தேர்ந்து ஆராய்ந்து எனக்கு அருளிச் செய்க.

வினைகள் சடமாகலின், உயிர்களைத்தேடிவந்து அடைய மாட்டா. உயிர்கள் தமக்கென ஒரு செயலும் சுதந்திரமும் இல்லாதனவாதலின், உயிர்களும் அவற்றைச் சென்று அடையமாட்டா! காந்தம் இரும்பை இயக்கித் தொழிற் படுத்துமாறு போல, இறைவனின் திருவருள், உயிர் களுக்கு அவையவை செய்த வினைப்பயன்களைக் கூட்டி நுகர்வித்துத் தொழிற்படுத்தும். இவ்வுண்மை, "காந்த பசாசம் போல் அவ்வினையைப் பேராமல் ஊட்டும் பிரான்" என வரும் சிவஞானபோத வெண்பா (11) வால் உணரப் படும் (15)

வி-உரை :- கண்களில்உள்ளமணியைப்போல்பவனே! கருத்திலும் கருத்தாய்த் திகழ்பவனே! திருவெண்ணெய் நல்லூர்வேந்தனே மெய்கண்டதேவனே! யான்என்கலங்கிய அறிவினால், உண்மையை யுணராமல், தங்களிடம் என் ஐயங்களை விண்ணப்பித்துக் கொள்கின்றேன். எளியேனைத்

எழுவகைத் தாதுவின் ஏழ்துளை யிரண்டும்
பெருமுழைக் குரம்பையிற் பெய்தகத் தடக்கி
நீக்கி என்றனைப் போக்கற நிறுத்தி
இச்சை முதலிய எழுப்பி நடத்திடும்
விச்சை சாலவும் வியப்பது நிற்க
வாக்கும் மனமும் போக்குள தனுவும்
சொல்லும் நினைவும் செய்யுஞ் செயலும்
நல்லவுந் தீயவும் எல்லா மறிந்து
முறைபிற ழாமற் குறைவுநிறை வின்றாய்க்
காலமுந் தேசமும் மாலற வகுத்து

தவிர்த்து விலக்கிவிடாமல், அருள்கூர்ந்து விளக்கம்கூறித் தெளிவித்தல், பெரியோர் ஆகிய தங்களுக்குக்கடமையாகும்.

தேவரீரைக் கூடி அநுபவிப்பது, எளியேனுடைய சிற்றறிவு ஆகும் என்றால்—, நும்முடைய பெருமை, எனது சொல்லுக்கும், மனதுக்கும் எட்டப் பெறுவதன்று.

நரம்பு எலும்பு மூளை தசை தோல் இரத்தம் சுக்கிலம் என்னும் தாதுக்கள் ஏழும், கண் நாக்கு மூக்கு செவி கருவாய் எருவாய் என்னும் துளைகள் ஒன்பதும் கூடிய உடலாகிய சிறையின் உள்ளே என்னை ஒடுக்கிவைத்தும், பிறகு விடுவித்தருளியும், இச்சை ஞானம் கிரியை ஆகிய வற்றை எழுப்புவித்தும் இயக்கி நிற்கின்ற நும்முடைய வித்தை மிகவும் வியக்கத்தக்கதாய் உள்ளது!

எளியேன் மனத்தால் நினைப்பதும், வாயாற் சொல்லுவதும், உடலாற் செய்வதும் ஆகிய, நல்லன தீயன ஆகிய புண்ணிய பாவங்கள் எல்லாவற்றையும், திருவுளத்திற் கொண்டு, அவற்றின் பயனை யான் நுகருமாறு செய்கின்றீர். அங்ஙனம் நுகர்விக்குங்கால், அப்புண்ணிய

85 நடுவுநின் றருத்தலின் நடுவனு குதியே
சான்றோர் செய்தி மாணறிருப் பின்றே
சாலார் செயலே மாலா குவதே
அத்துவா மெத்தி அடங்கா வினைகளும்
சுத்திசெய் தனையே ஒத்தகன் மத்திடை

பாவப் பயன்களை முறை பிறழாமலும் ஏற்றத் தாழ்வுகள் நேராமலும் நுகர்விக்கின்றீர்! மேலும் அவற்றை யான் நுகர்தற்குரிய காலம் இடம் ஆகியவற்றையும் நடுவு நிலைமையுடன் வரையறுக்கின்றீர்! ஆதலால் நீர் நடுவன் என விளங்குகின்றீர்!

சான்றோர்களின் செயல்கள் மயக்கம் தருவனவாக இருக்கமாட்டா; சான்றோர் அல்லாதவர்களின் செயல்களே மயக்கம் தருவனவாக ஒன்றற்கொன்றுமாறுபட்டும், முரண் பட்டும் இருக்கும்.

அத்தகைய நீர், எனக்குத் தீக்கை செய்தக்கால், மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலை என்னும் அத்துவாக்கள் ஆறினும், எஞ்சிக் கிடந்த வினைகளையெல்லாம் சுத்தி செய்து போக்கியருளினீர்:

அவ்வாறாகவும், இருவினையொப்பு நிலையில், என்னிடம் இருந்து அகன்ற வினைகள் யாவை? வினைகள் என்னிடம் இருந்து அகன்றனவாயின், அவைகள் தமது பயனை யாருக்கு நுகர்விக்கும்?

நும்மால் சுத்தி செய்யப்பெற்ற உயிர்களையே, மீட்டும் அவ்வினைகள் தம் பயன்களை நுகரச் செய்யும் என்றால்—, உடலாகிய சிறைக்குள் இருத்திவைத்து, உயிர்களை வருத்துவதன்றி, அவற்றின் வினைகளை நீர் முற்றப் போக்க இயலாத

நீங்கின என்னை ஊங்கூழ் வினைகளும்
ஆங்கவை அருத்துவ தாரைகொல் அதனாற்
கரும மருத்துங் கடனது இன்றும்
தருமம் புரத்தல் பெருமைய தன்றே
கண்ணினுள் மணிய! கருத்தினுட் கருத்த!
வெண்ணை வேந்த! மெய்கண்ட தேவ!
இடர்ப்படு குரம்பையுள் இருத்தித்
துடைப்பதில் லாஅருள் தோன்றிடச் சொல்லே.

நிலையிலேயே உள்ளீர் என்னும் இழுக்கு நேர்வதுடன், தருமம் புரக்கும் நுமக்கு அது தக்கது ஆகாது. ஆதலின், நும் திருவருளின் இயல்பை எளியேற்குச் செவ்விதின் விளக்கியருள்க.

(1) பெத்தம் முத்தி ஆகிய இரு நிலைகளிலும் ஆன்மா சிவத்தொடு கலந்து நிற்பினும், பெத்தத்தில் மலசம்பந்தம் பெற்றிருத்தலின், ஆன்மா சிவத்தையுணர முடிவதில்லை.

(2) ஆதலின் குருடனுக்குக் கோல்கொடுத்து உதவுவது போல, மலசம்பந்தம் ஆகிய குருட்டுத் தன்மையுடைய ஆன்மாக்களுக்கு, இறைவன் தனு கரண புவன போகங்கள் ஆகிய கோலைக்கொடுத்து உதவுவன். அதனால் சிவத்தைக் கலந்திருப்பினும் ஆன்மாக்களுக்குச் சரீர பந்தம் உண்டாயிற்று.

(3) ஆன்மாக்களின் வினைகள், சஞ்சிதம் ஆகாமியம் பிராரத்தம் என மூன்று வகைப்படும். சஞ்சிதவினை, ஆசாரியனின் தீக்கையாலும், ஆகாமியவினை ஆசாரியனின் அருளுபதேசத்தாலும் நீங்கும். பிராரத்தவினை உடலூழாய் அநுபவிக்கக் கழியும்.

பிராரத்த வினையை நுகர்ந்தே கழிக்கச் செய்தலின், கருமம் அருத்தும் கடனிலும்; சஞ்சிதவினை ஆகாமிய வினைகளைத் தீக்கையாலும், ஞானத்தாலும் கழித்தலின், கருமசுத்தி செய்யும்பெருமையிலும்; இறைவனின் செயலின்கண் முரண்பாடும் மயக்கமும் ஏதும் இல்லை.

(4) ஞானிகள் நுகர்வனவும் பிராரத்த வினையேயாகுமாயின், அவர்களைப் பூசித்தும் நிவேதித்தும் ஆன்மாக்கள் அருள்பெறுமாறு யாங்ஙனம்? எனின்—, ஞானிகள் பசுகரணம் கெட்டுப் பதிகரணம் பெற்றவர்கள் ஆதலானும்; "ஞானிகள் செய்தியெலாம் என்செய்தி என்றும், செய்தது எனக்கு இவர்க்குச் செய்தது என்றும், சிவமே ஞானிகளோடு உடனாகி ஒன்றுகொள்ளுதலாலும்; ஞானிகளுக்குச் செய்யும் பூசனை முதலியன எல்லாம், சிவத்திற்குச் செய்யும் பூசையேயாய் முடிந்து, ஆன்மாக்களை அருள்பெறச் செய்யும்.

(5) ஞானிகள் தேகத்தோடு இருப்பினும், அவர்தம் தேகம் சிவமாந் தன்மைப் பெருவாழ்வு பெற்றது என்னும் உண்மை,

"பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனைஅன் றேவிக் கராய்கொண்ட – பாலன்
மரணம் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
கரணம்போல் அல்லாமை காண்"

என்னும் திருக்களிற்றுப்படியார் செய்யுளால் தெளியப்படும்.

(16)

யாங்கு ஒளித்தீ ஐய!

சொற்றொழும்பு கொள்ளாநீ சூழ்ந்ததுவும் நற்செயல்கள்
மற்றவர்கண் ணின்நோக்கின் மாய்ந்தவுயிர்க்—குற்றங்(கு)
ஒளித்தியாங் கையய! உயர்வெண்ணெய் நல்லூர்க்
குளித்தமதுக் கொன்றையங்கோ. 17

வி—உரை :- உயர்ந்த திருவெண்ணெய்நல்லூரில், கொன்றை மாலையை அணிந்து எழுந்தருளியுள்ள, எம் தலைவராகிய சிவபெருமானாக விளங்குபவரே! எல்லா உயிர்களும் தேவரீருக்கு அடிமையாக இருக்கவும், தேவரீரின் திருவருளைப் பெறத்தக்க அடிமைத் திறங்கள் செய்துவரும் உபாயத்தினைச் சிலருக்கே கொடுத்தருள் கின்றீர். மற்றுள்ள பெத்தான்மாக்கள் நும்மாற் செயற் பட்டு வருகின்றனர். இங்ஙனம் பெத்தம் முத்தம் என்னும் இருவகை நிலையில்உள்ள ஆன்மாக்களும், தேவரீராலேயே செயற்பட்டு வரவும். நீர் நும் திருக்கண் பார்வையினால் சில ஆன்மாக்கள்பால் அருள்செய்து வெளிப்பட்டும், மற்றும் சிலர்பால் மறைந்து நின்றும் விளங்கிவரும் தன்மையை, எனக்குத் தெளிவுறுமாறு விளக்கியருள்க!

சிவன் நமது தலைவன் என்றும், நாம் அவனுக்கு அடிமைகள் என்றும் உணர்ந்து, அன்பினால் பொது நீக்கித் தனை நினைந்து வழிபடுகின்ற ஞானிகளாகிய அன்பர்களுக்கு, சிவம் தயிரில் நெய் போல விளங்கித் தோன்றும்.

இவ்வுண்மை யுணர்ந்துகொண்டு வழிபடுதல் இல்லாத பெத்தான்மாக்கள் திறத்தில் சிவம் பாலில் நெய் போலத் தோன்றாது மறைந்து நிற்கும்.

அம்மா எனக்கே அதிசயம் தருமே

கோலங் கொண்ட வாறுண ராதே
ஞாலங் காவலன் யானெனக் கொளீஇப்
பொய்யை மெய்யெனப் புகன்று வையத்(து)
ஓடாப் பூட்கை நாடி நாடா

" அரைசே பொன்னம் பலத்தாடும்
அமுதே என்றுன் அருள்நோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபகல்
ஏசற் றிருந்தே வேசற்றேன்;
கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துன் அடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப்
பேசா திருந்தால் ஏசாரோ ? " — மணிவாசகர்.

" விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே. "

— திருநாவுக்கரசர்.

" நேசத்தர் தம்பால் நிகழும் ததிநெய்போல்;
பாசத்தார்க்கு இன்றாம் பதி". — மெய்கண்டதேவர்.

(17)

வி–உரை:- திருவெண்ணெய்நல்லூர்மெய்கண்டதேவப் பெருமானே! துன்பத்திற்குக் காரணமாக உள்ள, உடற் பிறவியை யான் எடுத்துள்ளேன். ஆயினும் அதுகுறித்து நினைந்து யான் வருந்தாமல், ' இவ் உலகத்தைக் காக்கின்ற

என்னுட் கரந்தென் பின்வந் தருளி
என்னையுந் தன்னையும் அறிவின் றியற்று
என்னது யானெனும் அகந்தையுங் கண்டு
யாவர் யாவையும் யாங்கணுஞ் சென்று
புக்குழிப் புக்குப் பெயர்த்துழிப் பெயர்ந்து
மிக்க போகம் விதியால் விளைத்திட்(டு)
எற்பணி யாளாய் எனைப்பிரி யாதே
ஓடி மீள்கென ஆடல் பார்த்திட்(டு)
என்வழி நின்றனன் எந்தை அன்றே

அரசன், நாமேதான், என்று தவறாகக் கருதி மயங்கிச் செருக்குற்று நிற்கின்றேன், மேலும் பொய்யாகிய உடலை மெய்யென்று விரும்பி, உலகியல் நுகர்ச்சிகளிலேயே ஓடி உழல்கின்றேன். ' நமக்கு மேலே ஒரு தலைவன் உள்ளான் என்பதை உணராமல் இருக்கின்றேன்.

இத்தகைய எனக்குள்ளே, நீர் உடனாக மறைந்து நிற்கின்றீர். நான் செய்யும் செயல்களுக்கெல்லாம் ஒத்து ஒழுகிவருகின்றீர். என்னையும் நும்மையும் இன்னார் என்று உணர்ந்துகொள்ளாமல்: எனது என்றும் யான் என்றும் அகந்தையை மேற்கொண்டுள்ள என்னுடன், உயர்திணை அஃறிணை என்னும் பிறவி வேறுபாடுகளிலும், மண் விண் நரகு என்னும் உலகங்களிலும், உடன்வந்தும்; யான் விட்டுப் பெயரும் இடங்களில், நீரும் என்னைப்போல விட்டுப் பெயர்ந்து சென்றும்; வெவ்வேறு வகையான நுகர்ச்சிகளை யெல்லாம் எனக்கு உரிய முறைமையின்படி நீர் நுகர்விக்கின்றீர்.

இங்ஙனமெல்லாம் பெத்த நிலைமையில், நீர் நுமது தலைமையையும் முதன்மையையும் விட்டொழித்து, என் வசமாக இருந்து, என்னை ஊட்டியும் உறக்கியும் வருகின்ற-

அருள்மிக வுடைமையின் அருட்டுறை வந்து
பொருள்மிக அருள்தலும் பொய்ப்பகை யாதலும்
கைகண்டு கொள்ளெனக் கடலுல கறிய
மெய்கண்ட தேவன் எனப்பெயர் விரீஇத்
தன்னுட் கரந்து தான்முன் னாகித்
தன்னதுந் தானுமாய் என்னையின் றாக்கித்

பணியாளனாகத் திகழ்கின்றீர்; என்னைவிட்டு ஒருபோதும் நீங்காமல், எனக்கு உற்ற காவலரும் துணையுமாக விளங்குகின்றீர்! யான் பிறப்பிறப்புகளுக்கு உட்பட்டுப் போக்குவரவு புரிகின்ற நாடகத்தினைக் கண்டுகொண்டிருக்கின்றீர்.

எளியேன்மாட்டுப் பேரருள் உடைமையால், எளியேன் பொருட்டுத் திருவெண்ணெய்நல்லூர்த் தலத்தில் போந்து, தோன்றியருளிய நீர், முத்திநிலையில் எனக்குச் சிவானுபவமாகிய பொருள் பெருகும்படி அருள்புரிந்துவருகின்றீர்! அந்தச் சிவானுபவமாகிய பொருள், எனக்கு உலகியல் வாழ்வின் பொய்மையைக் கடிந்து நீக்கும்படி செய்கின்றீர்; மேலும் இவற்றையெல்லாம் ' நீயே கண்கூடாகக் கண்டு கொள் ' என்று, எனக்குக் காட்டியருளினீர்.

மேலும், அம்முத்திநிலையில் நும்முடைய பேரறிவினுள், என்னுடைய சிற்றறிவை உள்ளிட்டுக்கொண்டு, நுமது பேரருளே எனக்கு எங்கும் மேம்பட்டு விளங்கச்செய்தருளினீர்; நும்முடைய அருளும் நீருமாய், என்னையும் என்னுடைய அறிவிச்சை செயல்களையும் வியாபித்துக்கொண்டு, என்னையும் நும்மையும் எனக்குப் புலப்படும்படி அறிவித்தருளினீர்.

நீர் எல்லாவற்றையும் செயற்படுத்தி நிற்பினும், ஒன்றையும் சுட்டி அறியாமல், எதிலும் தோய்வற நிர்விகாரியாய்த் திகழுந்தன்மையையும், யான் எல்லாவற்றையும்

தன்னையும் என்னையுந் தந்து
தனதுசெய் யாமையும் எனதுசெய லின்மையும்
எம்மான் காட்டி யெய்தல்
அம்மா எனக்கே அதிசயந் தருமே. 18

செய்து நிற்பினும், என்னால் ஒன்றும் இயலாத செயலறுதியையும், யான் உணரும்படி செய்தருள்கின்றீர்.

இங்ஙனம் நீர் கட்டுநிலையில் மறைந்துநின்று என்னைச் செயல்படுத்தி இயக்குகின்ற முறைமையையும், வீட்டுநிலையில் ஒளிவிட்டிலங்கி உதவிகள் புரிகின்ற தன்மையையும், நினைந்து உணருங்கால், நும் இயல்பு எனக்கு எல்லையற்ற மிக்க வியப்பினை விளைவிக்கின்றது !

பெத்த நிலையிலும், முத்தி நிலையினும் இறைவன் உயிர்களுக்குச் செய்து போதரும் உதவிகளையெல்லாம், இப்பாடல் மிகவும் அற்புதமாய் அறிவித்துணர்ந்து அழகுற விளக்குகின்றது.

(1) இறைவன் பெத்தநிலையில் உயிர்களின் உள்ளே மறைந்துநின்று, அவற்றின் புறம் புறம் திரிந்து செய்யும் அருளுதவிகளை, "என்னுட் கரந்து என் பின்வந்து அருளி" என்றும்; முத்திநிலையில் உயிர்களின் அறிவு இச்சை செயல்களையெல்லாம் தன் அறிவிச்சை செயல்களின் வழி இயக்கி, அவற்றை விடாமல் உடந்தையாய் நின்று, சிவத்தோற்றம் ஒன்றுமே கண்டு இன்புறும் வகை செய்தலால், "தன்னுட் கரந்து தான் முன் ஆகி" என்றும்; சிறப்பித்துக் குறிப்பிட்டருளினார்,

(2) அகந்தைக்கும் ஆங்காரத்திற்கும் வித்தாய் நிலைக்களனாய் இருந்த தம்மை, "ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என் உள்ளமும் போய் நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ" என்றும்; "நாம்

ஒழிந்து சிவமானவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ" என்றும்; மணிவாசகர் அருளிச்செய்தாற்போல, குருவடிவினனாகிய இறைவன் (மெய்கண்டதேவர்) யாவும் இல்லாகும் வண்ணம் செய்து ஆட்கொண்டு அருள்புரிந்த திறத்தினை, "தன்னதும் தானுமாய் என்னை இன்று ஆக்கி" என்றதனாற் புலப்படுத்தினார்.

(3) மறையினால் அயனால் மாலால் மனத்தினால் வாக்கினால் மற்றும் குறைவிலா அளவினாலும் உணரொணாத சிவமாகிய தன் இயல்பினை உணர்த்தியதுடன், "நாடியோ என்போ நரம்பு சீக்கோழையோ தேடி எனையறியேன்" என இருந்த உயிரின் இயல்பினையும் ஒருசேர உணர்த்தியருளிய சிறப்பினை, "தன்னையும் என்னையும் தந்தனன்" என்றார்.

(4) சிவஞானசித்தியாரில் பத்தாம் சூத்திரத்தில், ஏகனாகி இறைபணி நிற்கும் சிவஞானச் செல்வர்களின் இயல்பினைக் குறித்து,

"உலகினில்என் செயல்எல்லாம் உன்னிதியே; நீயே
உள்நின்றும் செய்வித்தும் செய்கின்றாய் என்றும்
நிலவுவதோர் செயல்எனக்கின்று உன்செயலேஎன்றும்
நினைவார்க்கு வினைகள் எல்லாம் நீங்கும் தானே"

என்றபடி, 'எவற்றினும் தோய்வற நின்று எல்லாவற்றையும் செய்விப்பது இறை செயலே, எனக்கொரு செயலும் இல்லை' என்றுணர்ந்து "சும்மா இருக்கும் சுகம்' பெறுதலே ஞானிகளின் இயல்பு ஆதலின் அந்தச் சிறந்த சிவஞானநிலையினைத் தமக்கு மெய்கண்ட தேவராகிய குருநாதன் விளைவித்தருளினர் என்பார், "தனது செய்யாமையும் எனது செயல் இன்மையும், எம்மான் காட்டி எய்தல் அம்மா எனக்கே அதிசயம் தருமே" என விதந்து வியந்து பாராட்டி மகிழ்ந்தார். (18)

சுவேதவனத்தான்

தருமா தருமத் தலைநின்றாழ் வேனைக்
கருமா கடல்விடமுண் கண்டப் — பெருமான்
திருவெண்ணெய் நல்லூர்ச் சுவேத வனத்தான்
உருவென்ன வந்தெடுத்தான் உற்று. 19

வி–உரை :- கரிய பெரிய கடலில் தோன்றிய ஆலாலம் என்னும் விடத்தினை உண்டருளிய திருநீலகண்டத்தை உடையவனும், திருவெண்ணெய்நல்லூரில் தோன்றி எழுந்தருளிச் சுவேதனப்பெருமாள் என்னும் பிள்ளைத் திருநாமத்தை உடையவனும் ஆகிய பெருமான் (மெய்கண்ட தேவன்), தருமமாகிய புண்ணியத்தையும், அதருமமாகிய பாவத்தையும் செய்து, துன்பமாகிய கடலிலே விழுந்து அழுந்தி வருந்துகின்ற என்னை, என்னைப்போன்ற உருவுடையவனாகத் தோன்றி வந்து, யான் பிறவிப்பெருங் கடலில் விழுந்து அழுந்தி வருந்தாமல், தனது அருள்தரு கைகொடுத்து எடுத்து, என்னைத் தனது திருவடியிலே சேரும்படி கூட்டுவித்துக் கொண்டருளினான்.

(1) திருவெண்காட்டிறைவர் அருளால் அவதரித்தவர் ஆதலின், மெய்கண்ட தேவர்க்குத் திருவெண்காட்டிறைவர்க்குரிய 'சுவேதனப் பெருமான்' என்பது, பிள்ளைத் திருநாமமாக வழங்கப் பெற்றதாகலின் அதனை விதந்து 'சுவேதனத்தான்' என்றார். (சுவேதம் - வெண்மை வனம் - காடு. சுவேதவனத்தான் - திருவெண்காடன்) வளர்ந்து வாழ்ந்துவந்த இடமாதலின் "திருவெண்ணெய் நல்லூர்ச் சுவேத வனத்தான்" என்றார்.

(2) தீவினை போல, நல்வினை பிறவித் துன்பத்திற்கு ஏதுவாகலின், "தருமா தருமத் தலைநின்று ஆழ்வேன்";

என்றார். தருமம் - நல்வினை, புண்ணியம். அதருமம் - தீவினை, பாவம். அதருமத்தால் அன்றித் தருமத்தாலும் பந்தமும் பிறப்பும் நிகழும் என்பதனை,

"அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி"

எனவரும் சிவபுராண வரிகளால் தெளிக. "வல்வினைப் பட்டு ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே" என்றாற் போல, 'ஆழ்வேன்' என்ற சொற்குறிப்பால், இங்கே தருமம் என்றது வீடுபேறளித்து உய்விப்பதாகிய சிவபுண்ணியத்தினை விலக்கி, பிறவிக்கு ஏதுவாகிய பசு புண்ணியத்தினையே குறித்து நின்றது.

(3) மானைக்காட்டி மானைப் பிடிப்பதுபோல, இறைவன் மனித உருவம் கொண்டு குருவாக வந்தே, மனிதர்களை ஆட்கொள்ளவேண்டியிருத்தலின், "உருவென்ன வந்து எடுத்தான் உற்று" என்றார்.

"பார்வை என மக்களை முன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வை எனக் காணார் புவி" — திருவருட்பயன்.

(4) 'எடுத்தான்' என்னும் சொல், குறிப்புருவகம்; 'அம்மலம் கழீஇ' என்புழிப் போல. இச்சொல்,

"குருடரும் தம்மைப் பரவக் கொடு நரகக்குழி-நின்று
அருள் தரு கைகொடுத்து ஏற்றும் ஐயாறன் அடித்தலமே".
— திருவிருத்தம்.

"என்னைஇப் பிறவி சேரா வகைஎடுத்து என்சித் தத்தே
தன்னைவைத் தருளினாலே தாளிணை தலைமேற் சூட்டும்"
— சித்தியார்.

என்பன போலும் திருமொழிகள் பலவற்றையும், நினைப்பிக்கும் தகையதாகத் திகழ்கிறது. (19)

உற்றவர் பெற்றவர் மற்றவை முற்றும்
அற்றவர்க் கற்றவன் அல்லவர்க் கல்லவன்
அந்தம் ஆதி இல்லவன் வந்து
குரக்கு மனத்துக் கொடியேன் பரக்கும்
பரப்பைக் குவித்து நிறுத்திப் பிடித்திட்(டு)

வி–உரை :- உறவினர் - தாய்தந்தையர்-மனைவிமக்கள் - வீடு, நிலம், உடல் பொருள் முதலிய எல்லாவற்றையும் விட்டு நீங்கியவர்களுக்கு இரண்டறப் பிரிவின்றி நிற்பவனும், அங்ஙனம் நீங்காதவர்களுக்கு வேறாய் அப்பாற்பட்டு இருப்பவனும், தனக்கு அந்தம் ஆதி இல்லாதவனும் உலக உயிர்களுக்கெல்லாம் ஒப்பற்ற கண்ணாக விளங்குபவனும் ஆகிய சிவபெருமான்,

பெண்ணையாற்றங் கரையில் உள்ள திருவெண்ணெய் நல்லூர்க்குக் காவலனும், திருவருட்டுறை என்னும் கோயிலில் வீற்றிருப்பவனும் (அருளே கோயிலாக உடையவனும்) எம்கோனும் அண்ணலுமாய், எனக்குத் தன்னுடைய திருவடி மலர்களை வாழ்வுடன் வைப்பாக அளித்தருளியவனும் ஆகிய மெய்கண்டதேவன் என்னும் குருவடிவமாகத் திருமேனிகொண்டு எழுந்தருளினான்.

அங்ஙனம் எழுந்தருளி, குரங்கு போல அலைந்து திரிகின்ற மனத்தையுடைய என்னை, உலகியல் நுகர்ச்சிகளில் உழன்று வருந்தாதபடி, ஒருமுகப்படுத்தி ஒடுக்கினான். தனது திருவடி ஞானத்தில் நிறுத்தினான். பழைய உலகியல் நுகர்ச்சிகளின் வாதனை வயப்படாமல், என்னைக் காப்பாற்றினான். ஆணவ மலத்தில் அழுந்திக் கிடக்கும் கேவலநிலை

இருள்வெளி யாகும் மருளினை யறுத்து
வந்து புகுதலும் சென்று நீங்கலும்
இன்றி ஒன்றாய் நின்ற அந் நிலையில்
ஒன்றா காமல் இரண்டா காமல்
ஒன்று மிரண்டும் இன்றா காமல்
தன்னது பெருமை தாக்கா னாயினும்
என்னது பெருமை யெல்லா மெய்தித்
தன்னை எனக்குத் தருவதை யன்றியும்
என்னையும் எனக்கே தந்து தன்னது
பேரா னந்தப் பெருங்கட லதனுள்
ஆரா இன்ப மளித்துத் தீரா

(இருள்), தனு கரண புவன போகங்களைப் பெற்று நிற்கும் சகலநிலை (வெளி), ஆகிய மயக்கங்களைப் போக்கினான்.

தொன்றுதொட்டே அவனும் யானும் கலந்துள்ளோம். ஆயினும், அவன் தேடிவந்து என் உள்ளத்திற் புகவில்லை. யான் சென்றும் அவனுடன் கூடவில்லை. என்னுடன் கலந்திருத்தலான், என்னுடன் அவன் ஒன்றாகி (அபேதமாகி) விடவும் இல்லை; பிரிந்து நிற்றலால் இரண்டாகி (பேதமாகி) விடவும் இல்லை. ஒன்றும் இரண்டும் இன்றாகாமல் (பேதாபேதமாகி) நிற்கவும் இல்லை.

ஆயினும், என்னுடைய விழைவு அறிவு செயல் (இச்சை ஞானம் கிரியை) களையும், வியாத்தி வியாபகங்கள் ஆகிய பெருமைகளையும் எல்லாம் அவன் தன்னுடைய விழைவு அறிவு செயல்களிலும், முழுநிறைவிலும் உள்ளடக்கிக் கொண்டான்.

தன்னை எனக்குத் தந்தது மட்டுமே யன்றி, என்னையும் கூட எனக்கே ஆக்கித் தந்தான். தன்னுடைய

உள்ளும் புறம்பும் ஒழிவின்றி நின்ற
வள்ளன்மை காட்டி மலரடி யருளிய
மன்னன் எங்கோன் வார்புனற் பெண்ணை
வெண்ணெ காவலன் மெய்கண்டதேவன்
அண்ணல் அருணா லயத்தன் நண்ணி
மலமுத லாயின மாய்க்கும்
உலக உயிர்க்கெல் லாமொரு கண்ணே. 20

இருபா இருபஃது

முற்றிற்று.

பேரானந்தப் பெருங்கடலில் யான் அழுந்தித் திளைக்கும்படியும், எனக்கு ஆரா இன்பம் விளையும்படியும் செய்தான். எல்லாப் பொருள்களின் உள்ளும் புறம்பும் ஒழிவறநின்ற தன் வள்ளன்மையை, எனக்குச் செவ்விதிற் புலப்படுத்திக் காட்டியருளினான்.

இப்பாடலில் அருள்நந்திசிவாசாரியார், தமது குருநாதர் ஆகிய மெய்கண்டதேவர், தமக்குச் செய்தருளிய திருவருட்டிறங்களையெல்லாம் விதந்து வியந்து, அவர்தம் சிவமாந் தன்மைச் சிறப்பியல்பினைப் புகழ்ந்து மகிழ்ந்து போற்றுகின்றார். இப்பாடலின் சொற்றொடர் ஒவ்வொன்றும் மிக்க பொருட் செறிவும், அருள் அநுபவச் சிறப்பும் உடையதாக அமைந்து திகழ்கின்றது.

(1) 'அறுதல்' என்னும் சொல், இந்நாளில் விடுதல் நீங்குதல் என்னும் பொருளிலேயே வழங்குகின்றது. ஆயினும், பண்டைநாளில் அஃது 'ஒன்றற்கே அல்லது ஒருவர்க்கே உரிமையாதல்' என்னும் பொருளிற் பயின்று வந்ததாகத் தெரிகின்றது. இவ்வுண்மையினை,

"அற்றவர்க்கு அற்றசிவன்" உறைகின்ற
ஆலவாய் ஆவதும் இதுவே"

எனவரும் திருஞானசம்பந்தர் திருமொழியால் இனிதுணரலாம். பொதுநீக்கித் தனை நினைந்து, தன் ஒருவனுக்கே உரிமைப்படும் அடியவர்களுக்குத் தானும் அங்ஙனம் உரிமைப்படுகின்றான் என்பது, 'அற்றவர்க்கு அற்ற சிவன்' என்னும் தொடரின் செவ்விய பொருள் ஆகும்.

"தீர்த்தஅன் பாய அன்பர்க்கு
அவரினும் அன்ப போற்றி"

"புற்றில்வாள் அரவும் அஞ்சும்அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றும்ஓர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்துஎம் பெம்மாற்கு
அற்றிலா தவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சு மாறே."

எனவரும் திருவாசகத் திருமொழிகளிலும், இப்பொருளே பயின்று வந்திருத்தல், சிந்தித்து உணரற்பாலது.

"தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்"

என்னும் திருக்குறளில், 'அறப்பெற்றானை' என்னும் தொடர்க்கு, ஆசிரியர் பரிமேலழகர், "உரித்தாகப்பெற்றவனை" எனப் பொருள் வரைந்திருத்தல் காணலாம்.

(2) ' அல்லவர்க்கு அல்லன் ' என்பது, "பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யை" (206) என்றும், "பொய்யுடையார்க்கு அரன்போல் அகலும் அகன்றால்: புணரின் மெய்யுடையார்க்கு அவன் அம்பலம் போல மிக நணுகும்" (கோவை 48) என மணிவாசகர் அருளிச் செய்தவாற்றாலும் உணரப்படும்.

(3) கட்டுநிலை, வீட்டுநிலை ஆகிய இரு நிலைகளிலும் சிவமும் உயிரும் சேர்ந்து கலந்தே நிற்றலின், அதனை "வந்துபுகுதலும் நின்று நீங்கலும் இன்றி ஒன்றாய் நின்ற நிலை" என்றார்.

(4) உயிரும் சிவமும் கலந்து நிற்கும் அத்துவித நிலையின் இயல்பை, "ஒன்றாகாமல் இரண்டாகாமல் ஒன்றும் இரண்டும் இன்றாகாமல்" என்று, எளிய இனிய சொற்களால் தெளிவுற விளக்கிக் குறிப்பிட்டிருக்கும் திறம், பெரிதும் போற்றற்பாலது.

" நீவேறெனாது நான்வேறெனாது
நீயும் நானுமாய் ஏகபோகமாய்
இறுகும்வகை பரமசுகம் அதனை அருள் "

என அருணகிரிநாதர் திருவிடைமருதூர்த் திருப்புகழிலும்,

" உரையும் பொருளும் உடலும் உயிரும்
விரையும் மலரும்போல் விம்மிப்—புரையின்றிச்
சென்றவா றேங்கும் திருக்கயிலை எம்பெருமான்
நின்றவா றெங்கும் நிறைந்து "

என நக்கீரதேவர் பதினொன்றாம் திருமுறையிற் கயிலைபாதி காளத்திபாதி அந்தாதியிலும் (47)

" உடலுயிர் கண் அருக்கன் அறிவொளிபோற்
பிறிவரும் அத்துவிதமாகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம்
சைவ சித்தாந்தம் "

என உமாபதிசிவம் சிவப்பிரகாசத்திலும் (7) அருளிச் செய்திருப்பன, இங்கு நாம் எண்ணியுணரற்பாலனவாகும்.

(5) சிவம் தனது முற்றறிவு, ஐந்தொழிற்றிறன் முதலியவற்றை உயிர்களுக்குக் கொடுக்க முன்வரினும் " ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடலில் நாழி முகவாது நால்நாழி " என்றாற்போல, உயிர்களுக்கு அவற்றை ஏற்று நிற்கும் திறன் இன்மையானும், " உயிர்தானும் சிவானுபவம் ஒன்றிற்கே உரித்து " ஆகலானும் " தன்னது பெருமை தாக்கான் ஆயினும் " என்றார்.

(6) உயிர்களின் அறிவிச்சை செயல்கள் எல்லாம், முத்திநிலையிற் சிவத்தின் அறிவிச்சை செயல்களின் வழிப்பட்டு அவற்றின்கண் அடங்கிநிற்றலால், " என்னது பெருமை எல்லாம் எய்தி " என்றார்.

(7) எத்தகைய வள்ளல்களும், தம் பொருள்களுள் ஒன்றோ சிலவோ பலவோ தருவதன்றி, தம்மையே தரவல்லவர் அல்லர். ஆனால் சிவபிரானோ வேண்டுவார் வேண்டுவன எல்லாம் தருவதுடன், " தன்னிற் சிறந்தது பிறிதொன்று இன்மையின் " தன்னையே தன் அடியார்களுக்கு முழுதாகக் கொடுத்தருள்கின்றான். இதனை, " மலையே உன்னைத் தந்தனை " (30) என்றும், " கருமால் பிரமன் தடைபட்டு இன்னும் சாரமாட்டாத் தன்னைத்தந்த என் ஆரமுதை " (436) என்றும், " தந்ததுன் தன்னைக் கொண்டது என்றன்னை " (395) என்றும், மணிவாசகர் பாடியிருத்தல் கொண்டு உணரலாம். ஆதலின் " தன்னை எனக்குத் தருவதை அன்றியும் " என்றார்.

(8) "மாறுபட்டு அஞ்சு என்னை வஞ்சிப்ப யான் உன் மணி மலர்த்தாள் வேறுபட்டேன்" (115) என்றும், "மாறிநின்று என்னை மயக்கிடும் வஞ்சப்புலனைந்தின் வழியடைத்து" என்றும் மணிவாசகர் பாடுதல்போல, பொறிபுலன்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்த உயிரை, இறைவன் அவற்றினின்று மீட்டு விடுவித்துக் காத்தருள்தலின் "என்னையும் எனக்கே தந்து" என்றார்.

(9) 'அருளாலயத்தன்' என்றது, 'கருணாலயன்' (436) என மணிவாசகர் குறிப்பிடுவது போன்ற பொதுப் பொருள் தருவதன்றி, 'திருவருட்டுறை' என்னும் திருவெண்ணெய்நல்லூர்த் திருக்கோயிலைக் குறிக்கும் சிறப்பும் உடையதாகும்.

(10) இறைவன், உலகத்து உயிர்களுக்கெல்லாம் காணும் உபகாரமும், காட்டும் உபகாரமும் ஆகிய இரண்டும் செய்தருளும் இயல்புடையவனாகலின், "உலக உயிர்க்கெலாம் ஒரு பெருங் கண்ணே" என்று விதந்து புகழ்ந்தார்.

இருபா இருபஃது

விளக்கவுரை

முற்றிற்று

பிற்சேர்க்கை :

இருபா இருபஃது

“ ஈசன் இயற்கை ”

முன்னுரை :

இறைவன் நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டருள்பவன். நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே, கடவுள் புக்கு நின்று எழுந்தருளி விளங்குகின்றார். இறைவன் தன்னை நினைப்பவர்களைத் தானும் நினைந்து அருள் புரிகின்றான். தன்னை நினையாதவர்களைத் தானும் நினையாமல் இருந்து விடுகின்றான். கம்பி முழுவதிலும் பரவி நிற்பினும், சொடுக்கி (swltch) யினைத் தட்டும்போது மட்டுமே மின்னாற்றல் வெளிப்பட்டு மின்னொளியினை நல்குகின்றது; சொடுக்கியினைத் தட்டாதபோது, மின்னாற்றல் மின்னொளியினை நல்காமல் வாளாதே இருக்கின்றது. அது போலவே, உயிர்களின் உள்ளங்களிலெல்லாம் உயிர்க்குயிராய் எழுந்தருளி விளங்கும் இறைவன் தன்னை நினைக்கும் பொழுது கூடியும், நினையாத பொழுது நீங்கியும் நின்று, உயிர்களுக்கு அருள் புரிந்து வருகின்றான்.

ஈசன் இயல்பு :

தன்னை உணர்வினுள் உன்னி, அன்புடன் நினைந்து உருகும் அடியவர்களுக்கு, இறைவன் தேனும் பாலும் அமுதமுமாகத் தித்திக்கின்றான்! நினைத்தொறும் நினைத்தொறும் அன்பர்களின் உள்ளத்தில் ஆனந்தத் தேனைச் சொரிகின்றான் ஆண்டவன்! “ காயத்துள் அமுது ஊற ஊறக்

கரையிலா இன்ப உணர்வைக் கண்டுகொண்மின் " எனக் காட்டியருள்கின்றான் கடவுள் ! பன்னில் ஊறும் பழத்தினும் இன்சுவையாய் அன்பர்களின் உள்ளத்தில் ஊறி, அளவிலாக் களிப்பினை அளித்தருள்கின்றான் எம்பெருமான் ! இறைவனைத் தைலதாரைபோல இடைவிடாமல் சிந்தித்துத் தியானித்தல் வேண்டும் என்பது எல்லாச் சமயங்களும் கூறும் முடிவான கருத்து,

" இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே "

என மணிவாசகப் பெருந்தகையும் திருவாய்மலர்ந்தருளுதல் காணலாம்.

தேவாரப் பாடல் :

இங்ஙனம் இறைவனின் சிறந்த அருளியல்பினை, செந்தமிழ் நாட்டுத் தெய்வச் சான்றோர்களுள் ஒருவராகிய திருநாவுக்கரசர், தமது தேவாரப்பாடல் ஒன்றில் விளக்குகின்றார்.

" பன்னில் ஊறும் பழத்தினும் இன்சுவை
என்னில் ஊறி எனக்கே களிதரும்
உன்னில் உன்னும் உணவிடில் விட்டிடும்
என்னுள் ஈசன் இருந்த இயற்கையே "

அச்சில் இல்லை :

திருநாவுக்கரசர் பெருமான் பாடியருளிய இந்தத் தேவாரப்பாடல், அச்சில் இடம் பெறுமல் விடுபட்டுப் போயிருக்கின்றது. எத்துணையோ பல தேவாரப் பதிப்புக்கள் இந்நாளில் வெளிவந்துள்ளன ஆயினும், அவற்றில் இப்பாடல் இடம் பெறுமல் தவறிப்போய் விட்டிருக்கின்றது.

எனினும் இத்திருப்பாடல், திருநாவுக்கரசரின் சிறந்த தேவாரப் பாடல்களுள் ஒன்று என்பதும், இதனை நம் முன்னைச் சான்றோர்கள் பலரும் படித்துச் சுவைத்து மகிழ்ந்து பாராட்டியுள்ளனர் என்பதும், நமக்குப் பெரு மகிழ்ச்சியை விளைவிக்கின்றன.

பாம்பன் சுவாமிகள் :

